# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 18 ★ 24.03.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்



## ஐ.நா.வில் இலங்கைக்கு கால அவகாசம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பொறுப்பேற்க வேண்டும்.




## கால நீடிப்பால் கொந்தளிக்கிறது தமிழர் தாயகம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீதும் கடும் அதிருப்தி.



## மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது அனைத்துலக சமூகம்

## கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கோமாளிகள், சுயநலவாதிகள் திட்டித் தீர்த்தார் சுமந்திரன்





## ஐ.நாவில் இலங்கைக்கு கால அவகாசம் நீதிக்கான பயணத்தில் தமிழர்களுக்கு பின்னடைவு.

ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி அறிக்கை

# நீதியைத் தடுப்பதற்கே கால அவகாசம்!

## யாருக்காக செயற்படுகிறார் சுமந்திரன்? கேள்வி எழுப்புகிறது தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம்

"ஜெனீவாவில் எந்த ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினாலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை. அதனால், கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பது இந்தப் பிரச்சினையை மற்றொரு தளத்துக்குக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்கான ஒரு உத்தியாகவே கருதவேண்டியுள்ளது" எனக் கருத்து வெளியீட்டுள்ள, தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம், போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதைத் தடுப்பதற்காகவே சுமந்திரன் போன்றவர்கள் இந்த கால அவகாசத்துக்குச் சார்பாகச் செயற்பட்டிருப்பதாகவும் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.



ஜெனீவா தீர்மானத்துக்கு இணை அனுசரணையை வழங்கிய இலங்கை, பிரேரணையின் பிரதான அம்சமாக இருக்கும் கலப்பு நீதிப்பொறிமுறையை நடைமுறைப்படுத்தப்போவதில்லை என்பதை பகிரங்கமாகவே அறிவிக்கின்றது. பிரேரணை நிறைவேற்றப்பட்ட உடனடியாகவே இந்த அறிவிப்பை இலங்கை அமைச்சர்கள் வெளியிட்டார்கள். இது மனித உரிமைகள் பேரவையை அவமானப்படுத்தும் ஒரு செயற்பாடு என்பதுடன், பிரேரணை நடைமுறைப்படுத்தப்படப்போவதில்லை என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது எனவும் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளது.

ஜெனீவா பிரேரணை குறித்து தன்னுடைய அவதானிப்பை அறிக்கை ஒன்றின் மூலம் தெரியப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம், இந்த விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றது. இது குறித்த மையத்தின் அறிக்கையின் சுருக்கம் வருமாறு:

"ஜெனீவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது, நாடுகள் குறித்த பிரேரணைகளை நிறைவேற்றினாலும், அதனை செயற்படுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கான அதிகாரங்களைக் கொண்ட ஒன்றல்ல. அதனால்த்தான் 2015 இலும் பின்னர் 2017 இலும் ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாத இலங்கை மீது எந்தவிதமான நிர்ப்பந்தத்தையும் மனித உரிமைகள் பேரவையால் பிரயோகிக்க முடியவில்லை.

இது இலங்கைக்கு வாய்ப்பானதாக அமைந்திருக்கின்றது. நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் தமக்குள்ள

தொடர்ச்சி 10ஆம் பக்கம் →

## கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் கோமாளிகள், சுயநலவாதிகள் திட்டித் தீர்த்தார் சுமந்திரன்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடக பேச்சாளருமான சுமந்திரன் அவர்கள் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் கோமாளிகள், சுயநலவாதிகள் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் தேசிய நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலே தெரிவித்துள்ளார்.

அவரிடம் இந்த ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் உட்பட தமிழ்த் தரப்புக்கள் கோருகின்ற நிலையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படவில்லை சர்வதேச மேற்பார்வைக்கான கால எல்லையே நீடிக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் வாதிடுகின்றீர்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பின்வருமாறு பதிலளித்துள்ளார். தற்போதைய பிரேரணை நிறைவேற்றப்படாது விட்டிருந்தால் பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையை கையாள்வதற்கு எவ்விதமான பிடிமானங்களும் சர்வதேசத்திடம் இருந்திருக்காது. இதனை நாங்கள் உள்ளிட்ட அனைத்து தமிழ்த் தரப்புக்களும் உணர்ந்துள்ளோம். கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்று மக்கள் மத்தியில் கூறும் தரப்புக்கள் ஜெனீவாவுக்குச் சென்று அங்கு நிறைவேற்றப்பட்ட பிரேரணையை திருத்தங்களின்றி முன்னகர்த்துவதற்கு தங்களது பணத்தையும், நேரத்தையும் விரயம் செய்து கடுமையாக உழைத்திருந்தன. ஆகவே இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படாது விட்டிருந்தால் அடுத்து எதுவுமே இல்லை என்பதை அவர்கள் நன்றாகவே உணர்ந்துள்ளார்கள். அவ்வாறிருக்கையில் எதற்காக பொய்யான பிரச்சாரம் செய்கின்றார்கள் என்பது எனக்கு தெரியாது. தற்போது கூட சிவசக்தி ஆனந்தன் எம்.பி கூட்டமைப்பு புதுக்கதை கூறுவதாக தெரிவிக்கின்றார். நாங்கள் புதுக்கதை கூறவில்லை. 2017ஆம் ஆண்டு 34/1 தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றபோது வவுனியாவில் ஒருநாள் முழுவதும் ஆராய்ந்து நாங்கள் இத்தகையதொரு தீர்மானத்தினையே எடுத்திருந்தோம். அன்றும் சிவசக்தி ஆனந்தன் தான் அதற்கு மாறாக இருந்தார். ஏனைய கட்சிகள் இணங்கியிருந்தன. அவ்வாறிருக்க இம்முறையும் இந்த விடயம் சம்பந்தமாக சம்பந்தன் ஐயாவின் கொழும்பு இல்லத்தில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூடி ஆராய்ந்திருந்தது. இதன்போது, சர்வதேசத்தின் மேற்பார்வைக்கான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று தான் தீர்மானம் உத்தியோகபூர்வமாக எடுக்கப்பட்டது.

அப்படியிருந்தும், பொதுவெளியில் கால அவகாசம் என்ற சொல்லை பயன்படுத்தி மக்களை பிழையாக வழிநடத்தி கோஷங்களை எழுப்பியபோது அரசியல்வாதிகளும் வேறுநிலைப்பாட்டுடன் இருக்கின்றோம் என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக கால நீடிப்பு வேண்டாம் என்று குரல் கொடுத்துள்ளனர். உண்மையை அறிந்திருந்தும் எங்களுடைய கட்சியின் உறுப்பினர்களும் சரி, பங்காளிக் கட்சிகளும் சரி அனைவருமே அரசியல் சுயலாபத்துக்காக கோமாளித்தனமாக செயற்பட்டமையை காணமுடிந்தது.

## அனைத்துலக விசாரணையை நிராகரித்து இறைமையை பாதுகாத்துள்ளோம். ரணில் விக்ரமசிங்க பெருமிதம்



ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் அனைத்துலக நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் மூலம் தற்போதைய அரசாங்கம் நாட்டின் இறையாண்மையை பாதுகாத்துள்ளது என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று நடந்த சிறிலங்காவின் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் 67 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். “ஜெனிவா அமர்வில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர், அனைத்துலக சமூகம் உள்நாட்டு நீதி முறையை ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் எனவே, போர்க்குற்றங்களுக்கு எதிராக அனைத்துலக நீதிமன்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறினார்.ஆனால், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ச, 2009 இல் அத்தகைய நீதிமன்றத்தை அமைக்க அப்போதைய ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுடன் இணங்கியிருந்தார். தற்போதைய அரசாங்கம் 2015 இல் பதவிக்கு வந்த பின்னர், போரின் போது தவறுகள் செய்த படையினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக உள்ளூர் சட்ட பொறிமுறைகளின் மூலம், தேவையான நடவடிக்கைகளை

தொடர்ச்சி 10ஆம் பக்கம் →

# கால அவகாசம் அல்ல, ஒரு கால நீட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விளக்கம் குறித்து தமிழ் புத்திஜீவிகள் கேள்வி

யுத்தம் என்ற போர்வையில் வடக்கு-கிழக்கில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுடன் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மௌனிக்கச் செய்யப்பட்டது. ஆனால் போராட்டத்தின் வழிமுறைகள் இலங்கை அரசை சர்வதேசத்தின் முன்னால் ஒரு குற்றவாளியாக நிறுத்தியது. இந்த வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வினைதிறனுடன் பயன்படுத்திக்கொண்டதா?

ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் சர்வதேசம் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எமது ஒற்றுமையின் மூலமே நாம் எமது பிரச்சினைகளை தொடர்ந்தும் சர்வதேசத்தின் கண்காணிப்பில் வைத்திருக்க முடியும் என்று கூறி மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டீர்கள். அந்த ஒற்றுமையைக் காத்து சர்வதேச சமூகத்தை இலங்கை அரசாங்கத்தின்மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கு நீங்கள் எடுத்த முயற்சிகளையும் அதன் விளைவுகளையும் பட்டியலிட முடியுமா?

ஆயுதப் போராட்டமே இனப்பிரச்சினையை ஐ.நாசபைவரை கொண்டு சென்றது. தேசிய இன விடுதலைப் போராட்டம் நியாயமானது என்றும் இலங்கையில் ஆட்சி புரிபவர்கள் எவரும் தமிழ் மக்களை இந்நாட்டின் சம உரிமையுடைய குடிமக்களாக நடத்துவதில்லை என்பதையும் நாடாளுமன்றத்தில் நீங்களும் எடுத்துரைத்திருக்கின்றீர்கள். ஆனால் ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள இனப்பிரச்சினையை ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்வதற்கு உதவிய அதே சர்வதேச சமூகத்திடம் எடுத்துரைத்து எமக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் நீங்கள் எந்தளவிற்கு அக்கறையுடன் செயலாற்றினீர்கள்?

2010ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டுவரை இலங்கை அரசாங்கத்தின் கபடநாடகங்களை அறிந்ததால்த்தானே 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் இலங்கைமீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து தீர்மானம் நிறைவேற்றியது. அதற்கு இலங்கை அரசாங்கமும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. அதில் ஒரு விடயம்தானே சர்வதேச விசாரணையை வலியுறுத்துவது. அன்று தொடக்கம் நீங்களும் அரசாங்கத்திற்கு ஆதரவாகத்தான் செயற்பட்டு வருகின்றீர்கள். இதன் காரணமாகத்தான் நீங்கள் அன்று சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றீர்கள். ஆனால் இப்பொழுது சர்வதேச விசாரணை தேவை என்கிறீர்கள். ஏன் இந்த தடுமாற்றம்?

இலங்கை அரசாங்கம் தான் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக் கொண்ட விடயத்தையே நடைமுறைப்படுத்தாதவிடத்து, அதற்கு 2017ஆம் ஆண்டு மேலும் சர்வதேசத்தின் கண்காணிப்பு என்ற பெயரில் கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுத்தீர்கள். ஆனால் கால அவகாசம் முடியும் நேரத்தில் அரசாங்கம் உங்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஆட்சிக்கலைப்பு நாடகத்தைக் கச்சிதமாக நடத்தி முடித்திருந்தது. நீங்களும் சனநாயகத்தைக் காப்பதற்காக கச்சைகட்டி நின்றதாக எங்களிடம் நடித்தீர்கள். நீங்கள் சனநாயகத்தைக் காத்ததினால் உங்களுக்கு கம்பறெலியா திட்டம் மூலம் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்பட்டதைத் தவிர தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகளைக் கூறமுடியுமா?

அரசாங்கத்திற்கு நாங்கள் முண்டுகொடுப்பது உண்மைதான் என்று ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். இந்த முண்டுகொடுப்பின் மூலம் உங்களால் தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்டு நிர்மாணிக்கப்படும் பௌத்த விகாரைகளைத் தடுக்க முடிந்ததா? வடக்கு-கிழக்கை பூகோளரீதியில் நிரந்தரமாகப் பிரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்க முடிந்ததா?

கடந்த வருடம் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு அதிகளவிலான நிதி ஒதுக்கப்பட்டதற்காக வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்ததாகக் கூறினீர்கள். அந்த நிதியைக் கொண்டு அந்த அலுவலகம் ஒருவரையேனும் கண்டுபிடித்ததா? ஆதரவளித்த நீங்கள் அந்த அலுவலகத்தின்மீது எத்தகைய அழுத்தத்தைப் பிரயோகித்தீர்கள்?

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடன் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துவோம் என்று சொன்னீர்கள். இன்று நான்கு வருடங்களுக்கும் மேலாகி விட்டது. அவர்களை ஏன் இன்னமும் விடுவிக்க முடியவில்லை? நாட்டில் பயங்கரவாதம் என்ற ஒன்று இல்லாத போது அந்த சட்டம் மட்டும் எதற்கு? ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் 40ஆவது கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் இலங்கையை தொடர்ந்தும் சர்வதேசத்தின் கண்காணிப்பில் வைத்திருப்பதற்கு மேலும் இரண்டாண்டு கால அவகாசம் வழங்க வேண்டும் என்று

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

# ஜெனீவா ஒரு மாயை?

இலங்கைக்கு மீண்டும் இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்த பிரேரணை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். நீதிக்காக வருடக்கணக்கில் வீதிகளில் நின்று போராடிக்கொண்டிருக்கும் மக்களைப் பொறுத்தவரையில் மீண்டும் ஏமாற்றம்தான். பூகோள அரசியல் நலன்களின் அடிப்படையில் நாடுகள் செயற்படும்போது, பாதிக்கப்பட்ட மக்களுடைய குரலுக்கு ஜெனீவா செவிசாய்க்காது என்பது மீண்டும் ஒரு முறை உறுதிப் படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் 40/1 என்ற புதிய தீர்மானம்தான் இப்போது வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. 2015 இல் முதலிலும், 2017 இல் பின்னரும் கொண்டுவரப்பட்ட தீர்மானம்தான் இப்போது ஒரு சில சிறிய மாற்றங்களுடன் மீண்டும் வந்திருக்கின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனை, பல விடயங்கள் தொடர்பிலும் வெளிப்படையாகப் பேசியிருக்கின்றார். குறிப்பாக, 2015 இலும் பின்னர் 2017 இலும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டபோது, காணப்பட்ட தொனியை இலங்கை இப்போது மாற்றிக்கொண்டிருக்கின்றது. முன்னைய தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டபோது, அதனை நிறைவேற்றுவதாக வாக்குறுதிகளைக் கொடுத்த இலங்கை, இப்போது தமது உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படையாக சர்வதேச அரங்கில் சொல்லத் துணிந்திருக்கின்றது.

அதாவது, படைத் தளபதிகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட முடியாது என்பதையும், சர்வதேச விசாரணைகளுக்கு இடமில்லை என்பதையும் இலங்கை இப்போது சர்வதேசத்துக்கு வெளிப்படையாகச் சொல்லிவிட்டது. திலக் மாரப்பனையின் பதிலுரையில் இந்த விடயங்கள் தெரிந்தது. அதனைவிட, இலங்கையின் சார்பில் ஜெனீவா சென்றிருந்த அமைச்சர் சரத் அமுனுகமவும் இதனைத்தான் சொல்லியிருக்கின்றார். அதாவது, கலப்பு நீதிமன்ற விசாரணை என்ற தீர்மானத்துக்கு இணை அனுசரணையை வழங்கிய கையுடன், சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்கப்போவதில்லை என ஜெனீவாவில் வைத்தே இலங்கை பிரதிநிதிகள் கூறுகின்றார்கள்.

இரண்டு விடயங்களில் இலங்கை தெளிவாக இருக்கின்றது. ஒன்று - படையினரை விசாரணைக்கு உள்ளாக்குவதில்லை. இரண்டு - சர்வதேச விசாரணைக்கு இடமளிப்பதில்லை. 2015 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு தடவைகள் கால அவகாசம் வழங்கப்பட்டும் கூட, எதுவும் நடைபெறாமைக்கு இலங்கையின் இந்த உறுதியான நிலைப்பாடுதான் காரணம். இப்போதும், இந்த நிலைப்பாட்டில் இலங்கை உறுதியாக இருக்கின்றது. இந்த நிலையில், வழங்கப்பட்டிருப்பது கால அவகாசமாக இருந்தாலென்ன, சுமந்திரன் சொல்வதைப்போல, சர்வதேச கண்காணிப்பு நீடிக்கப்படுவதாக இருந்தாலென்ன எதுவுமே நடைபெறப்போவதில்லை என்பதே உண்மை.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களைப் பொறுத்தவரையில், இந்த இரண்டும் இல்லாமல் அவர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை. பிரேரணைக்கு இணை அனுசரணையை வழங்கியிருந்தாலும், மனித உரிமைகள் பேரவையால் பரிந்துரைக்கப்பட்ட கலப்பு நீதிப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை திட்டவட்டமாக நிராகரித்திருப்பது பிரேரணை அர்த்தமற்றது என்பதை வெளிப்படையாக்கியுள்ளது. மனித உரிமைகள் பேரவையிலுள்ள முக்கிய பலவீனம், தீர்மானங்களை நிறைவேற்றலாம். ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுக்க முடியாது. அதற்கான நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கும் அதிகாரம் பேரவைக்கு இல்லை.

ஆக, விசாரணைகள் எதுவும் நடைபெறப்போவதில்லை. இரண்டு வருடங்களின் பின்னர் 2021 இல் இது போன்ற தீர்மானம் மீண்டும் வரலாம். பிரச்சினையின் தீவிரத் தன்மையை நீர்த்துப்போகச் செய்வதற்கு இந்த அவகாசத்தை இலங்கை பயன்படுத்திக்கொள்ளும். அவர்களுடைய இலக்கும் அதுதான். கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக தமிழர் தரப்பிலிருந்து உழைத்த சுமந்திரன் போன்றவர்களின் எதிர்பார்ப்பு என்ன?

ஜெனீவாவை ஒரு பிரச்சார அரங்காக, பிரச்சினையை உயிர்த் துடிப்புடன் வைத்துக்கொள்வதற்கான ஒரு அங்கமாக தமிழர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். அதன் மூலம் அவர்களுக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ, அல்லது விஷேட தீர்ப்பாயம் ஒன்றை அமைப்பதன் மூலமே போர்க்கால குற்றங்களுக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும். "சர்வதேச கண்காணிப்பு நீடிக்கப்படுகின்றது" என்ற பெயரில் ஜெனீவாவில் கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்கும் சுமந்திரன் போன்றவர்கள், இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

# காலநீடிப்பால் கொந்தளிக்கிறது தமிழர் தாயகம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீதும் கடும் அதிருப்தி

தற்போது நடைபெற்று முடிந்த ஐ.நா மனித உரிமைகள் சபையின் 40 வது கூட்டத் தொடரிலே சிறீலங்கா அரசிற்கு மேலும் 02 வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால் யுத்தத்திலே கடுமையான பாதிப்புக்களை சந்தித்து நீதிக்காக வீதியிலே இறங்கிப் போராடிக்கொண்டிருக்கும் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். ஐ.நாவில் இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டமை குறித்து தமிழர் தாயகத்திலே உள்ள சிவில் சமூகத்தினர் தமது கடுமையான கண்டனத்தை பதிவு செய்துள்ளார்கள்.

## உறவுகளை தேடுபவர்கள் அனைவரும் மரணமடையும் வரை கால அவகாசம் வழங்கப்படுமா?

**வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் இணைப்பாளர் கலாதேவி**



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை இழந்துவாடும் உறவுகளாகிய நாங்கள் எமது உறவுகளைத் மீட்பதற்காக கடந்த 2 வருடங்களாக வெயிலையும், மழையையும் பாராமல் வீதியில் இறங்கி போராடிய எங்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் சர்வதேச சமூகம் கால அவகாசம் வழங்கியதால் நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம்.

2015 இலும், 2017 இலும், சர்வதேசம் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினை வழங்கியிருந்தது. இந்த நான்கு ஆண்டுகளில் காணாமலாக்கப்பட்ட ஒரு உறவு குறித்தாவது விசாரணை பூரணமாக மேற்கொள்ளப்பட்டதா? சாட்சிகள் இருந்தும் அதற்கான விசாரணையைக் கூட செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை. இதுதான் இலங்கை அரசாங்கத்தின் சுயரூபமாக இருக்கின்றபோது மீண்டும் கால அவகாசம் வழங்கவேண்டிய அவசியம் ஏன் எழுந்தது?

எங்களின் போராட்டத்தினை கவனத்தில் எடுக்காத, அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினை வழங்குவதன் ஊடாக சர்வதேசம் இலங்கை அரசிடம் எவ்விதமான முன்னேற்றத்தினை எதிர்பார்க்கிறது. பொறுப்புக்கூறல் விடயங்களில் மிக முக்கியமாக காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் விடயத்தினைக் கூட கருத்திலெடுத்து செயற்பட தயாரில்லாத நிலையில்த்தான் அரசாங்கம் இருக்கின்றது. ஆககுறைந்தது வயதானவர்களும் சிறுவர்களும் வீதியில் இறங்கி போராடிக் கொண்டிருக்கின்றார்களே அவர்களின் கோரிக்கைகள் என்ன என்பதை இலங்கை அரசு சிந்திக்கின்ற மனோநிலை இல்லை என்பதை ஐ.நா.மன்றம் புரிந்துகொள்ளவில்லையா?

மனிதாபிமானமே இல்லாத அரசாங்கத்திடம் மனித உரிமைகளை உறுதிப்படுத்துமாறு கால அவகாசத்தினை ஐ.நா.மன்றம் வழங்குவதால் எவ்விதமான பயனுமில்லை. சர்வதேசம் இவ்வாறு கால அவகாசம் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதால் தமது அன்புக்குரியவர்களை தேடிக்கொண்டிருக்கும் உறவுகள் ஒன்றன்பின் ஒன்றாக எதிர்பார்ப்பு நிறைவேறாது உயிர்களை மாய்ப்பதற்கே வழிவகுப்பதாய் இருக்கும். இதனையா ஐ.நா.மனித உரிமை ஆணையமும் கால அவகாசத்திற்குத் துணைபோன தமிழர் தரப்புக்களும் விரும்புகிறார்கள்.

## கால அவகாசமானது உரிமைப் போராட்டங்களை பலவீனப்படுத்தவே வழிசமைக்கும்

**கேப்பாபுலவு நிலமீட்பு போராட்டக்குழுவின் இணைப்பாளர் ஆசிரியர் அரியகலா**



2017ஆம் ஆண்டு நாம் எமது காணிகளை விடுவிக்குமாறு தொடர்போராட்டத்தினை ஆரம்பித்தபோது இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டாவது தடவையாக கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. முதலாவது தடவையாக இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தில் எமது வாழ்நிலங்களை விடுவிக்கவில்லை. மாறாக படைமுகாம்களை நிரந்தமரமாக்குவதற்கே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை மையப்படுத்தி நாம் போராட்டத்தினை ஆரம்பித்து தற்போதுவரையில் உரிய தீர்வு வழங்காத நிலையில் போராடிக்கொண்டே இருக்கின்றோம்.

எமது உரிமைப்போராட்டத்தினை மலினப்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகள் இக்காலப்பகுதிகளில் அரசாங்கம் எடுத்திருக்கின்றது. காடுகளை விடுவித்து மக்கள் வாழ் நிலங்களை விடுவித்ததாக செய்திகளை பரப்பியது. போராட்ட மக்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்த முனைந்தது. இவ்வாறுதான் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. ஆனால் படைமுகாமினை மாற்றியமைத்து மக்களின் வாழ் இடங்களை மீண்டும் வழங்க வேண்டும் என்ற மனப்பாங்கு அரசாங்கம் என்ற வகையில் கூட ஏற்பட்டிருக்கவில்லை. இலங்கையின் அரசியல் சூழலினை பார்க்கின்றபோது அடுத்து தேர்தலொன்றே நடைபெறுவதற்கான சத்தியக்கூறுகளே இருக்கின்றது. அதில் யார் வெற்றி பெறப் போகின்றார்கள். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்றே சிங்களத் தலைவர்கள் சிந்திக்கின்றார்கள். மக்கள் வீதிகளில் போராடிக் கொண்டிருக்கின்றார்களே என்பதெல்லாம் அவர்களின் கண்ணுக்குத் தெரியவில்லை. அதனைப்பற்றி அவர்கள் கருத்தில் கொள்வதே கிடையாது. இப்படியிருக்கின்றபோது, இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினை வழங்குவதன் ஊடாக மக்கள் தமது வாழ்வுரிமைக்காக முன்னெடுக்கின்ற போராட்டங்களை முற்றாக மலினப்படுத்துவதற்கே வழி ஏற்படுவதாக அமையும். அதனைவிடுத்து கால அவகாசம் வழங்குவதன் ஊடாக இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிவு காட்டி நேர்மையாக செயற்படும் என்று கருத முடியாது. அவ்வாறு செயற்படும் மனநிலையில் இலங்கை அரசாங்கம் இல்லை.

## செயற்பாடுகளை மேற்கொள்ளவேமாட்டோம் என்பவர்களுக்கு ஏன் சர்வதேச மேற்பார்வை

**தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் வசந்தராஜா**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலைச் செய்வதற்காக சர்வதேச மேற்பார்வைக்கான காலமே நீடிக்கப்படுகின்றது. மாறாக கால அவகாசம் வழங்கப்படவில்லை என்பதே தமிழ் மக்களின் ஆணைபெற்றவர்களின் வாதமாகின்றது. அத்துடன் சர்வதேச மேற்பார்வைக்கான அவகாசம் வழங்கப்படாது விட்டால் ஐக்கிய நாடுகள் உட்பட சர்வதேசத்திலிருந்தே தமிழ் மக்களின் பிரச்சினைகள் நீக்கப்பெற்றுவிடும். அதன் பின்னர் என்ன செய்வது என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கக்கூடாது. இலங்கையை பாதுகாப்புச்சபை ஊடாக குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று சர்வதேச ரீதியாக நீதிவிசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில்த் தான் உள்ளார்கள்.

இதற்காகத்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெற்று வந்த சமகாலத்திலும் வடக்கிலும், கிழக்கிலும் மிகப்பெரும் கவனயீர்ப்பு போராட்டங்களும், பேரணிகளும் சர்வதேசத்திடம் நீதிகோரி மேற்கொள்ளப்பட்டன. இதனைவிடவும் சனநாயக ரீதியாக தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இங்கு அரசியல் தலைவர்கள் முன்னிலை வகித்து போராடவில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மக்கள் தான் நேரடியாக களமிறங்கி போராடியுள்ளார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட மக்களின் நிலைப்பாடு கால அவகாசத்தினை வழங்கக்கூடாது என்பது தெளிவாகின்றது.

அடுத்து, கால அவகாசம் அல்ல, சர்வதேச மேற்பார்வை வழங்கப்படுகின்றது என்று அர்த்தம் கற்பிக்கின்றார்கள். பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது என்றால் அந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதில் தவறில்லை. மாறாக, அரசாங்கம் 2015ஆம் ஆண்டு இணைஅனுசரணை வழங்கிய தீர்மானத்திலிருந்து தற்போது வரையில் பொறுப்புக்கூறலை செய்வதற்காக வழங்கப்பட்ட காலத்தில் எவ்விதமான செயற்பாடுகளையும் மேற்கொண்டதாக இல்லை.

இதனைவிடவும், நாட்டில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அவ்வாறாக எந்தவிடயங்களும் நடைபெறவில்லை என்றே வாதிடுகின்றது. அத்துடன் சர்வதேச விசாரணை, கண்காணிப்பு என எதனையுமே ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாட்டில் தாம் இல்லை என்பதை இலங்கை அரசாங்கம் அத்தனை சர்வதேச நாடுகளின் முன்னிலையிலும் பகிரங்கமாகச் சொல்லியாகிவிட்டது.

ஆகவே எதனையுமே செய்ய மாட்டேன் என்று கூறும் இலங்கை அரசாங்கத்தினை இரண்டு வருடங்கள் மேற்பார்வை செய்வதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கப்போகின்ற நன்மைகள் என்ன? எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்படுத்தப்போவதில்லை என்று கூறும் தரப்பினருக்கு எதற்காக கால அவகாசம் வழங்க வேண்டும்.

# கால அவகாசத்தால் மக்களுக்கு ஐ.நா மீதான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியுள்ளது

## தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவர் ஆம்ஸ்ரோங் அடிகளார்

ஐ.நாவின் 40ஆவது மனித உரிமை அமர்வு தமிழ் மக்களுக்கு ஒரு நம்பிக்கையீனத்தினை தந்துள்ளது. 2009 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசபடையினரின் ஆதிக்கத்தில் தமிழின அழிப்பினை வேகமாக மேற்கொண்டது. அதன் பின்னர் பௌத்த சாசனங்கள், தொல்பொருள் திணைக்களம், வனதிணைக்களம் ஊடாக தமிழின அழிப்பினை இன்று முன்னெடுத்து வருகின்றார்கள்.

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் எல்லைக் கிராமங்களில் தமிழர்களின் நிலம் தொடர்ச்சியாக பறிபோய்க் கொண்டிருக்கின்றது. திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்கள், பௌத்த தாபன உருவாக்கம் போன்ற பல நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தற்போது வெளிவந்துள்ள சிறிலங்காவுக்கான கால அவகாசம் மக்களுக்கு ஐ.நாமீதான பெரும் அதிருப்தியையும், நம்பிக்கையீனத்தினையும் வெளிப்படுத்தியுள்ள அதேவேளையில், 2009 ஆண்டு வரையிலும் இடம்பெற்ற போர் சம்மந்தப்பட்ட விடயங்களில்த்தான் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது இடம்பெறுவரக்கூடிய திட்டமிட்ட இனஅழிப்பிற்கான செயற்பாடுகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது வேதனையாக இருக்கின்றது. மக்கள் பலர் இதனை உணர்ந்துள்ளார்கள்.



ஐ.நாவின் அறிக்கை மக்களுக்கு அதிருப்தியினை கொடுத்துள்ளதுடன் இன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் திட்டமிட்ட இன அழிப்பிற்கான எந்த விடயங்களும் அதில் கருத்தில் கொள்ளப்படவில்லை. இந்த கால அவகாசம் காணாமல் போனவர்களின் பிரச்சனையிலும் காணிப்பிரச்சனையிலும் பெரிய தாக்கத்தினை உண்டுபண்ணுமா என்பது சந்தேகத்தினைத்தான் தருகின்றது. இலங்கை அரசு தொடர்ச்சியாக கால அவகாசத்தினைத்தான் சர்வதேசத்திடம் கேட்கின்றது. அதற்காக கண் துடைப்பான காரியங்களைத்தான் முன்னெடுத்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் காணாமல் போன அலுவலகத்தினை உருவாக்குவதற்கான பணியாளர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெற்றுள்ளதாக அறிகின்றோம். அதன் வழியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறான தீர்வுவரும் என்பதில் பல சந்தேகங்கள் உருவாகியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்த கால அவகாசம் என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த வகையில் தீர்வு தரும் என்பது பெரிய சந்தேகமாக இருக்கின்றது. இந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் வடக்கு கிழக்கில் தமிழர் வாழிடங்களில் பௌத்த தலங்களை நிறுவுவது, சிங்கள கிராமங்களை உருவாக்குவது போன்றவற்றை நிறுத்துமாக இருந்தால் கால அவகாசத்திற்கு இலங்கை அரசு செவி கொடுத்திருக்கின்றது என்பதை நாங்கள் அறிந்து கொள்ளலாம். இல்லை என்றால் அது ஒரு கண்துடைப்பாக தமது அரசியல் செயற்பாட்டிற்காகவே இது அமையும் என்பது வெளிப்படையாக தெரியும்

# இலங்கை அரசாங்கத்திடம் சர்வதேசம் எதிர்பார்ப்பது என்ன?

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பபிலராஜ்

கால அவகாசம் மக்களுக்கு ஐ.நாமீதான பெரும் அதிருப்தியையும் நம்பிக்கையீனத்தினையும் வெளிப்படுத்தியுள்ளது.




2015ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் தனது பொறுப்புக்கூறலை செய்வதற்காக சர்வதேசத்தினால் முதல் தடவையாக கால அவகாசம் வழங்கியது. அதற்கு இலங்கை அரசாங்கமும் இணை அனுசரணை வழங்கியது. அதில் 25 பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன. அவற்றைச் செய்வதற்கு போதிய காலம் இல்லை என்று கூறி 2017இல் மீண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இருப்பினும், இனமுரண்பாடுகளுக்கான தீர்வைக் காண்பதற்காக உருவாக்கப்படுவதாக கூறப்பட்ட புதிய அரசியல் அமைப்பு பணிகள் முற்றுப்பெறவில்லை. காணாமல்போனவர்கள் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டாலும் அது செயற்பாட்டு ரீதியான அதிகாரத்தினைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை இச்செயலகம் கொண்டிருக்கவில்லை. இழப்பீடுகளை வழங்குவதற்கான பணியம் அமைப்பதற்கு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டாலும் ஆறுமாதங்களாகியும் அது குறித்த எந்த முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை. இதனைவிட பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குமாறு கோரப்பட்ட நிலையில் அதனை நீக்கி புதிதாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் மிக மோசமான கடுமையான சரத்துக்களை கொண்டுள்ளது. இப்படி இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளில் எந்தவொரு விடயத்திலும் திறந்த மனதுடன் செயற்படவில்லை. காலம் கடத்துதல், அல்லது மக்களையும் சர்வதேசத்தினையும் ஏமாற்றும் செயற்பாடுகளில்த்தான் ஈடுபட்டு வந்துள்ளது. ஐ.நாவில் நிறைவேற்றபட்ட தீர்மானத்தில் 25 பரிந்துரைகளில் எந்தவொன்றையும் நிறைவேற்ற விரும்பாத நிலையில் இருக்கின்ற இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் ஒருதடவை கால அவகாசம் வழங்குவதன் ஊடாக சர்வதேசம் இலங்கை அரசாங்கத்திடத்தில் எதனை எதிர்பார்க்கின்றது.

தற்போது வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்திற்கான காலப்பகுதியிலும் கூட அரசாங்கம் ஏமாற்றுவித்தைகளையே தொடரப்போகின்றது. இதன்மூலம் பொறுப்புக்கூறுவதற்கான வகிபாகம் நீர்த்துப்போகச் செய்யும் ஆபத்தான நிலைமையே உருவாகின்றது. இதனை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

# மீண்டும் ஒருமுறை தமிழினம் ஏமாற்றப்பட்டிருக்கிறது

## யாழ். பல்கலைக்கழக மாணவி மதியரசன் கிருசாந்தினி



கடந்த 13ஆம் திகதி முதல் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமர்வில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான ஒரு தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. யுத்தம் நிறைவடைந்த காலப்பகுதியிலிருந்து தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் திட்டமிட்ட இன அழிப்பிற்கும் எதிராக குரல் கொடுத்து எதற்காக இற்றைவரை போராடிக் கொண்டிருந்தோமோ அத்தனையும் வீணாகி மீண்டும் ஒருமுறை தமிழினம் ஏமாற்றப்பட்டிருக்கிறது. இலங்கை அரசாங்கமும் தமிழர் விரோத அமைப்புகளும் சேர்ந்து இவ்வாறானதொரு தமிழ் மக்களுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றி இருப்பது வேதனைக்குரியதாகும்.

ஈழத் தமிழர்களாகிய நாங்கள் இன்றுவரை தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்திற்கு எதுவித கால அவகாசமும் வழங்கக்கூடாது என்பதனை வலியுறுத்தி வந்தோம். ஏனென்றால் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திற்கு 4 ஆண்டு கால அவகாசம் வழங்கியும் இலங்கை அரசாங்கம் எத்தகைய காத்திரமான முடிவையும் எடுத்திருக்கவில்லை. இவ்வாறாக வழங்கப்பட்ட இந்த கால அவகாசத்தின் போது தங்களுடைய காணாமல் போன உறவுகளை தேடிக்கொண்டிருந்த இருபது உறவுகள் உயிரிழந்திருக்கிறார்கள். இனியும் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கினால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நம்மிடம் இருக்கும் எச்ச சொச்ச ஆதாரங்களும் அனைத்தும் அழிக்கப்படுவதற்கான சூழ்நிலையின் மத்தியில்த்தான் தமிழ் இனம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

எனவேதான் இலங்கைக்கு இனியும் கால அவகாசம் வழங்கக்கூடாது என்பதனை நாம் வலியுறுத்தி வந்தோம். ஆனால் இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றும் முயற்சியில் தமிழர் விரோத அமைப்புகள் செயற்பட்டு தமிழர்களுக்கெதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தமிழர் மீண்டும் ஏமாற்றப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

# கால அவகாசத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஒத்துழைத்த கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கு மக்கள் சரியான தண்டனையை வழங்க வேண்டும்.

## முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எஞ்சிய உறவுகளையும் பறிகொடுப்பதற்காகவே ஜெனிவாவில் சிறிலங்காவுக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

போரின் இறுதி நாட்களில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் சரணடைந்த, ஒப்படைக்கப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட நிலையிலும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்களில் 40 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் சிறிலங்கா அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என கோரி தாம் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்ட போதிலும் சர்வதேச சமுகம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை. ஜெனிவாவில் மீண்டும் சிறிலங்கா அரசுக்கு கால அவகாசத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஒத்துழைத்த தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கு மக்கள் சரியான தண்டனையை வழங்க வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் யாராவது ஒரு உறவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தால், காணாமல் போன உறவுகளின் வேதனை அவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்றும் கடும் ஆத்திரத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் குறிப்பிட்டார்.

## ஐ.நா சர்வதேசத்தையும் ஏமாற்றியுள்ளது - அனந்தி சசிதரன்



ஐ.நா.வினால் இலங்கைக்கு கால நீடிப்பை வழங்கியுள்ளமையானது, சிறுபான்மையின மக்கள் எந்த நாட்டிலும் இன அழிப்புக்கு உட்படுத்தப்படலாம் என்ற செய்தியை உலகுக்கு வழங்கியுள்ளதாக முன்னாள் வடக்கு மாகாணசபை அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். ஐ.நா.வின் தீர்மானத்தால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு நன்மையும் இல்லை. தமிழர்களை மட்டுமல்லாது சர்வதேசத்தையும் ஏமாற்றியுள்ளது. அத்தோடு சர்வதேசமும் அதற்கு உடந்தையாக செயற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தை கேட்காது தன்னிச்சையாக நாடுகளுடைய அரசியல் பூகோள விடயங்களை கருத்திற்கொண்டே இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. நீதியை கோரி இனிமேல் ஐ.நா. விற்கு செல்ல முடியாது. ஏனெனில் நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுள்ளோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீதிக்காக போராடிய மக்களுக்கு ஐ.நா.வின் தீர்மானம் ஏமாற்றத்தையே தந்துள்ளது

### கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தவராஜா புவனராஜ்



காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான நீதியானது இலங்கை அரசாங்கத்தின் மூலமாக இதுவரை பெற்றுத்தர முடியாத காரணத்தினால் இலங்கையிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஐக்கிய நாடுகள் சபை மூலமாக தமக்கான நீதி கிடைக்கும் என நம்பியிருந்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தை ஈர்ப்பதற்காக கிளிநொச்சி யாழ்ப்பாணம் மட்டக்களப்பு வவுனியா மாவட்டங்களில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் போராட்டங்களில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலுச் சேர்த்தனர்.

இப்போராட்டம் மூலமாக ஐக்கிய நாடுகள் சபையிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தது. அவற்றுள் முக்கியமானவைகளாக இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்க கூடாது எனவும், ஓ எம் பி எனப்படும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தேவையில்லை எனவும், சர்வதேச விசாரணை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடர் நிறைவுற்றுள்ள நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதானது பாதிக்கப்பட்ட எமது மக்களின் வேண்டுகோள் சர்வதேச சமூகத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

போராட்டங்களை மேற்கொண்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், ஏனைய பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஒரு ஏமாற்றத்தை ஏற்படுத்திய நிகழ்வாக இது காணப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை இது வரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் பெற்றுத்தரவில்லை என்பதே பாதிக்கப்பட்ட மக்களிடம் கேள்வியாக முன்நிற்கின்றது.

## சர்வதேசம் தமிழ் மக்களை திட்டமிட்டு ஏமாற்றி உள்ளது

### தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பின் தலைவர் பாதிரியார் சக்திவேல்



இலங்கை அரசாங்கத்திற்கு காலஅவகாசம் வழங்கக்கூடாது என்பதுதான் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அரசாங்கம் ஏற்கனவே பெற்றுக்கொண்ட கால அவகாசத்தில் ஒன்றையும் செய்யவில்லை. இனியும் எதையும் செய்யப்போவதும் இல்லை என்பதை உணர்ந்தே இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்கக்கூடாது என்பதை நாங்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தோம். ஆனால் இரண்டு ஆண்டுகள் கால எல்லை கொடுக்கப்பட்டுள்ளது என்பது தமிழ் மக்களை பொறுத்தமட்டில் பெரும் ஏமாற்றம். சர்வதேசம் தமிழ் மக்களை திட்டமிட்டு ஏமாற்றி உள்ளது.

இன்று சர்வதேசத்திற்கு தேவை என்னவென்றால் தற்போது உள்ள ரணில் அரசினை பாதுகாக்கவேண்டிய தேவை உள்ளது. படையினரை எந்த ஒரு நீதிமன்றத்திலும் நிறுத்தமாட்டோம் என்பதை அரசு தெளிவாக சொல்லி நிற்கின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் நீதி என்பது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்த போர்குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட்டால் மட்டும்தான் நீதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு. இலங்கை அரசாங்கம் கலப்பு நீதிமன்றத்தினையும் கலப்பு விசாரணையினையும் எதிர்க்கின்றார்கள். அதற்கு அனுமதி கொடுத்துள்ளது சர்வதேசம். ஆனால் உள்ளக விசாரணை போதும் என்று அரசு சொல்கின்றது. இந்த உள்ளக விசாரணையில் எங்களுக்கு எந்தவித நம்பிக்கையும் கிடையாது. இந்த விடயத்தில் சர்வதேசம் இலங்கைக்கு ஆதரவாக நடந்து கொண்டது என்பது சர்வதேசரீதியாக இன அழிப்பு நடைபெற்ற ஒரு நாட்டிற்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு அநீதி என்றுதான் சொல்லமுடியும்.

இலங்கையில் நடந்தது மனிதஉரிமை சம்மந்தப்பட்ட விடயம் அல்ல. இன அழிப்பு நடந்துள்ளது. இன அழிப்பிற்கான நீதி என்பது மனித உரிமை சம்மந்தப்பட்ட விடயமாக பார்க்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும். இங்கு நடந்தது போர்க்குற்றங்கள் என்ற ரீதியில் கொண்டுபோகப்பட வேண்டியது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுசென்றால் மட்டுமே நீதிகிடைக்கும். கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தமிழ்மக்களுக்கு எதிரானது. தமிழ்மக்களின் அரசியல் நீதிக்கு எதிரானது. தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு திட்டமிட்டவகையில் சிதைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழர் பிரதேசங்களில் கட்டமைப்பு ரீதியான இனஅழிப்பிற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம்தான் கால அவகாசம்

### வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் தேவராசா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கால நீடிப்பு என்ற சொற்பிரயோகம் எதற்காக பயன்படுத்தப்படுகின்றது என்று எமக்கு தெரியாதுள்ளது. 2009ஆம் ஆண்டு மே 16ஆம் திகதி மாலை 4.30மணி வரையில் குண்டுகள், செல்களின் பாதிப்புக்களை நேரடியாக பார்த்திருந்தோம். அந்த வலிகளை நேரடியாக உணர்ந்திருக்கின்றோம். பாடசாலைகளில், வைத்தியசாலைகளில் மக்கள் தமது பாதுகாப்புக்காக ஒதுங்கியபோதும் கூட்டங்கூட்டமாக மக்கள் இருப்பதைக் கண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மனிதம் மறக்கப்பட்டு நடத்தப்பட்ட தக்குதல்களில் அவலங்களை உலக நாடுகள் நன்கு அறிந்துள்ளன. புகைப்படங்கள், காணொளிகள் மூலமாக அதற்கான சான்றுகளை அவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினை வழங்குவதற்கு எவ்வாறு அவர்களின் மனநிலையில் ஒரு விட்டுக்கொடுப்பு ஏற்படுகின்றது என்பது எமது கேள்வியாக இருக்கின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தொடர் போராட்டத்தினை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இலங்கை அரசாங்கம் இந்த பிரச்சனை குறித்து ஆக்கபூர்வமாக ஏதாவது ஒரு நடவடிக்கையினை எடுத்ததா? இல்லை. ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசத்தினை பயன்படுத்தி கண்துடைப்புக்காக காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகத்தினை எமது விருப்புக்கு மாறாக ஸ்தாபித்து விட்டு எம்மையும், சர்வதேசத்தினையும் ஏமாற்றவே பார்க்கின்றது.

கால அவகாசத்தினைப் பெற்று தன்மீது காணப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை படிப்படியாக நீர்த்துப்போகச் செய்வதே இலங்கை அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருக்கின்றது. தற்போதைய கூட்டத்தொடரிலும் கூட இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழு அதற்காகவே அங்கு சென்றிருக்கின்றது.

இந்த விடயங்களையெல்லாம் சர்வதேசம் உணராமலில்லை. அவ்வாறு இருக்கையில், இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினை வழங்குவதன் அடிப்படை என்ன? கடந்த காலங்களில் வழங்கப்பட்ட கால அவகாசத்தினைப் பயன்படுத்தி தமிழர் தாயகத்திலே கட்டமைப்புரீதியான இனஅழிப்பையே இலங்கை அரசு முன்னெடுத்து வருகின்றது.



இந்த நிலையில் மேலும் இரண்டு வருடம் கால அவகாசம் வழங்கப்பட்டமையானது கட்டமைப்பு ரீதியாக இன அழிப்பிற்கு இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமாகவே நாங்கள் கருதுகின்றோம். தமிழர்களின் வலிகளை உணர்ந்த தமிழ்த் தலைவர்கள் இலங்கை அரசிற்கு கால அவகாசம் வழங்கவேண்டும் என்று கூறமாட்டார்கள். அவ்வாறு கால அவகாசம் வழங்கவேண்டும் என்று கூறுபவர்கள் நிச்சயம் தமிழின துரோகிகளாகத்தான் இருப்பார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

# மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது அனைத்துலக சமூகம்

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

அமெரிக்காவினதும் அதன் கூட்டணி நாடுகளினதும் அனைத்துலகக் கொள்கை என்பது ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் வேறுபட்டது. மத்திய கிழக்கு நாடுகளில் அவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அந்த நாடுகளில் தனது படையினரை நேரிடையாக களமிறக்குவது என்பது ஒரு உத்தி.

ஐரோப்பாவைச் சுற்றியுள்ள நாடுகளை கட்டுப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பை முன்நிறுத்துவது மற்றுமொரு உத்தி. அதனைத்தான் நேட்டோ படையினர் செய்து வருகின்றனர்.

அதேசமயம் ஆசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மனித உரிமை மீறல்கள் மற்றும் சிறுபான்மை இனங்களின் மீதான அரச வன்முறைகளை பயன்படுத்துவது மேலுமொரு மாற்று உத்தி.

அதாவது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் கிளை அமைப்புக்களில் ஒன்றான மனித உரிமைகள் பேரவை என்பவற்றின் சுயாதீனத்தன்மை என்பது ஒரு மாயையாகும். வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு அல்லது அழுத்தங்களுக்கு வழி ஏற்படுத்தும் அமைப்புக்களாகவே அவை செயற்பட்டு வருகின்றன.

எனவே தான் 2009 ஆம் ஆண்டு ஒரு முழு அளவிலான இனஅழிப்பை மேற்கொள்வதற்கு சிறீலங்கா அரசுக்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு ஐக்கிய நாடுகள் சபை வன்னியில் இருந்து விலகிக்கொண்டது. இதனை மறுபக்கமாகக் கூறுவதானால் சிறீலங்கா அரசு மேற்கொண்ட இனப்படுகொலைக்கு ஆசீர்வாதம் வழங்கிச் சென்றது ஐ.நா தான். அன்று அவர்களை வெளியேற வேண்டாம் என மன்றாடிக் கேட்டு போராடிய தமிழ் மக்களில் குழந்தைகள், பெண்கள் வயதானவர்ககள் என 40,000 இற்கு மேற்பட்டவர்கள் இன்று உயிருடன் இல்லை.

எனினும் இந்த இனப்படுகொலை இடம்பெற்று பத்து ஆண்டுகள் அண்மிக்கும் நிலையிலும் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கேட்டு தமிழ் மக்கள் ஐ.நாவின் முன் போராடி வருகின்றனர்.

ஆனால் தமிழ் மக்கள் மீதான சிறீலங்கா அரசின் இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களை தனக்கு கிடைத்த பேரம்பேசும் பொருளாகப் பயன்படுத்தியுள்ளது அமெரிக்கா. அதற்கு துணை வழங்கியுள்ளது அதன் மேற்குலகக் கூட்டணி.

அதன் வெளிப்பாடுதான் 40:1 என்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் மூலம் சிறீலங்கா அரசுக்கு மேற்குலகம் வழங்கியுள்ள மேலும் இரண்டு ஆண்டுகள் கால நீடிப்பு. அதாவது தற்போதைய சிறீலங்கா அரசுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வதில் அமெரிக்கா வெற்றி கண்டுள்ளது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்கு மக்கள் வழங்கிய ஆணையை புறம் தள்ளி ஆதரவளித்துள்ளது.

அது மட்டுமல்லாது இந்த தீர்மானத்தை கொண்டுவருவதற்கு உதவிய இணை அனுசரணைக்குழுவில் உள்ள நாடுகளின் பட்டியலை ஆராய்ந்தால் தமிழ் மக்களின் அனைத்துலக நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்வியை நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஏனெனில் கனேடிய நாடாளுமன்றத்திலும் சரி உள்ளூர் அரசியல் சபைகளிலும் சரி பல தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். கனடா வாழ் தமிழ் மக்கள் கொண்டாடும் பொங்கல் விழாவிற்கு வந்து பொங்கல் பானையில் அரிசி போடுகின்றார் கனேடியப் பிரதமர். ஆனால் மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான தீர்மானத்தை கொண்டுவருவதில் முன்னிற்கின்றது கனேடிய அரசு.




பிரித்தானியாவின் நிலையும் அதுவே இலட்சக் கணக்கில் தமிழ் மக்கள் வாழும் பிரித்தானியாவில் பல முக்கியமான தமிழ் அமைப்புக்கள் உள்ளனர். தமிழ் மக்களில் பலர் உள்ளூர் அரசியலில் உள்ளனர். தமிழ் மக்களின் விழாக்களுக்கு வந்து சிறப்பித்துச் செல்கின்றனர் பிரித்தானிய அரசியல்வாதிகள். ஆனால் அவர்களின் ஆதரவும் சிறீலங்கா அரசுக்கே உண்டு.

அதாவது புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், தமிழ் மக்களும் ஒரு தவறான திசையில் தொடர்ந்து போராடி வருகின்றனர் என்பதையே இந்த வாரம் ஐ.நா மனித உரிமைகள் அமைப்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் உணர்த்துகின்றது. இதனை மறுபக்கமாகக் கூறினால் எமது போராட்ட உத்திகளை காலத்துக்கு காலம் மீள்ஆய்வு செய்வதில் நாம் தவறிழைத்துள்ளோம்.

விடுதலைப்புலிகளின் போராட்ட காலத்தில் ஆயுதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டபோதும், தியாகி திலீபன், அன்னை பூபதி போன்றோர் மூலம் அகிம்சைப்போரும் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டது, அமைதிப்பேச்சுக்களின் போது தமிழ் மக்களின் கோரிக்கைகளை புறக்கணித்த இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தையும் சில சந்தர்ப்பங்களில் விடுதலைப்புலிகள் புறக்கணித்திருந்தனர். அதாவது தமிழ் மக்களின் எதிர்ப்புக்களை காண்பிப்பதற்கு அவர்கள் பல வழிகளை தெரிவுசெய்திருந்தனர்.

விடுதலைப்போராட்டத்தை புலம்பெயர் தமிழ் சமூகமே எதிர்காலத்தில் முன்னகர்த்த வேண்டும் என தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் 2008 - 2009 காலப்பகுதியில் விடுத்த கோரிக்கையை உள்வாங்கும் நடவடிக்கையில் புலம்பெயர் தமிழ் சமூகம் பின்தங்கியுள்ளது என்பது தற்போது வெளிப்படையாகியுள்ளது. எந்தவித நிபந்தனைகளுமின்றி சிறீலங்கா அரசுக்கு வழங்கப்பட்ட காலநீடிப்பு அதனையே காட்டுகின்றது.

புலம்பெயர் தேசத்தில் ஏற்பட்ட இந்த பின்னடைவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனக்கு சாதகமாக கடந்த 10 வருடங்களில் பயன்படுத்திவந்துள்ளது. எனவே தான் சிறீலங்கா அரசுடன் இணைந்து ஒரு சிங்களக் கட்சியாக அது தற்போது பகிரங்கமாகவே செயற்பட ஆரம்பித்துள்ளது.

அதாவது சிறீலங்கா அரசுக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என்று தெரிவித்து கடந்த வாரங்களில் தமிழ் மக்கள் மேற்கொண்ட போராட்டங்களை எல்லாம் புறக்கணித்து சிறீலங்கா அரசுக்கு காலஅவகாசம் வழங்குவதற்கான ஆதரவுகளை பகிரங்கமாகவே வழங்கும் கட்சியாக கூட்டமைப்பு செயற்பட்டபோதும், அதன் உறுப்பினர்கள் ஜெனீவாவுக்கு வந்து போரினால் பாதிக்கப்பட்டு நீதிக்காக போராடும் தமிழ் மக்களின் வரிசையில் அமர்வதை நாம் அனுமதித்ததே எமது போராட்டத்தின் தோல்வியை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் இரண்டு வருடங்களில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதே தற்போதைய கேள்வி?

புலம்பெயர் தமிழ் மக்கள் தமது தேசத்தில் உள்ள உள்ளூர் அரசியல் மற்றும் தேசிய அரசியலில் ஈடுபடும் தமிழ் உறுப்பினர்கள் தொடர்பில் மீளாய்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். சிறிலங்கா அரசுக்கு ஆதரவாக செயற்பட்ட நாடுகளின் தலைவர்களை புறக்கணித்தல் அல்லது அவர்களுக்கான எதிர்ப்புக்களை தெரிவிப்பதன் மூலம் அவர்கள் மீதான அழுத்தங்களை ஏற்படுத்த முடியும். தற்போது தாயகத்தில் எழுச்சி பெற்றுவரும் மாணவர்கள் மற்றும் மக்களின் போராட்டங்களுக்கான தொடர் ஆதரவுகள் மற்றும் உதவிகளை வழங்குவதன் மூலம் தாயகத்தின் அரசியலில் ஒரு மாற்றத்திற்கான பாதையை ஏற்படுத்தமுடியும் என்பதுடன் தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஒரு உயிர்ப்பு நிலையிலும் வைத்திருக்க முடியும்.

புலம்பெயர் தமிழ் சமூகத்தில் ஒரு ஒருமித்த செயத்திட்டத்தை முன்னெடுக்கும் பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். வியாபார ஊடகங்களை புறம் தள்ளி தேசிய ஊடகங்கள் உயிர்பெறவேண்டும், அதன் மூலம் தான் உண்மையான செய்திகளை மக்கள் அறிந்துகொள்ள முடியும் என்பதுடன் ஏமாற்றும் அரசியல் கட்சிகளையும் இனங்காண முடியும். அதாவது எதிர்வரும் இரண்டு வருடங்களில் நாம் மேற்கொள்ளப்போகும் திட்டங்களில் தான் சிறிலங்கா அரசை அனைத்துலக நீதிமன்றத்தின் முன் கொண்டுவருவதும், நாம் ஒரு காத்திரமான அரசியல் தீர்வை நோக்கி நகர்வதும் தங்கியுள்ளது.

# ஐ.நா.வில் இலங்கைக்கு கால அவகாசம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பொறுப்பேற்க வேண்டும்

கணிதன்

தமிழ் தேசிய இனத்தின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் அரசாங்கத்தினால் சர்வதேச சமூகத்தைத் தவறாக வழிநடத்தி பயங்கரவாதமாக சித்திரிக்கப்பட்டு மௌனிக்கச் செய்யப்பட்டபோதிலும், இலங்கை அரசாங்கத்தின் சிங்கள பௌத்த மேலாதிக்கவாத முகம் வெளிப்பட்டதன் காரணமாக இராஜதந்திர ரீதியாக எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான வழி திறக்கப்பட்டிருந்தது.

யுத்தம் முடிவடைந்த கையுடன் 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றியீட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தேசிய பட்டியல் மூலம் நியமனம் பெற்ற எம்.ஏ. சுமந்திரனும் இணைந்து மே மாதம் 23ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வன்னிக்குச் சென்றிருந்தனர். அது மீள்குடியேற்றம் தொடங்கியிருந்த காலப்பகுதி.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுடன் உரையாடி, அவர்களின் துயரக்கதைகளையும் இடப் பெயர்வின் போதும் முள்ளிவாய்க்காலிலும் அவர்கள் அனுபவித்த கொடூர அனுபவங்களையும்



கேட்டறிந்துகொண்டனர். இதன்போது திருவாளர் சுமந்திரன் ஏதோ சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்பவரைப்போல் விழுந்து விழுந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். திருவாளர் சம்பந்தன் அந்த மக்களிடம் கேள்விகள் கேட்க, அவரால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்ட கனிஷ்ட சட்டத்தரணி சுமந்திரன் தனது சிரேஷ்ட சட்டத் தரணிக்கு உதவி செய்பவரைப்போல் செயற்பட்டிருந்தார்.

சந்திப்புகள் முடிவடைந்து யூலை மாதமளவில் சனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் ஒரு அறிக்கையும் கையளிக்கப்பட்டது. அப்போது அந்த அறிக்கை ஐ.நா. சபையிடமும் சர்வதேச நாடுகளின் தூதுரகங்களிலும் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பவற்றுக்கு சர்வதேச விசாரணை நடத்தி நீதி வழங்குமாறு கோருவது என்றும் அதற்காகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு ஒன்று ஜெனீவா செல்வது என்றும் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் கூட்டமைப்பினர் ஜெனீவா செல்வதில்லை



என்று முடிவெடுத்திருப்பதாக திரு.சுமந்திரன் அறிவித்தார்.

தற்பொழுதுவரை ஜெனீவாவில் நடைபெற்றுள்ள விடயங்களைத் தொகுத்துப் பார்க்கின்றபொழுது, கூட்டமைப்பின் தலைமை குறிப்பாக சம்பந்தன் சுமந்திரன் ஆகியோர் ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுடனேயே குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டிய இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றி தமது சுயநலன்களைப் பூர்த்தி செய்துகொண்டு தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டுள்ளனரோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

இலங்கையை தமது வழிக்குக் கொண்டுவரவேண்டிய தேவை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்குல நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் இருந்தது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி தாங்களும் கால் பதிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக அவர்கள் தமிழ் மக்களின் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையைக் கையிலெடுத்திருந்தனர். தமிழ் மக்களின் பிரச்சினைகளை தமது துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திய அந்த சக்திகளிடம் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளையும் அவர்கள் பட்ட துன்பங்களையும் எடுத்துச் சொல்லி அவர்களுக்கு நீதியையும் தீர்வையும் பெற்றுக்கொடுப்பதற்கு கூட்டமைப்பு தவறிவிட்டது.

இன்று எப்படி அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குகிறதோ அதேபோன்றே அவர்கள் சொல்வதெற்கெல்லாம் சொல்லும்படியெல்லாம் சுமந்திரனும் சம்பந்தரும் ஆடியதுடன், இது இராஜதந்திர இரகசியம். வெளியில் சொல்ல முடியாது. எமது பிரச்சினைக்கான தீர்வு இதோ வருகிறது, இந்த பண்டிகையில் வந்துவிடும், அந்த பண்டிகையில் வந்துவிடும் என்று தம்மை நம்பி வாக்களித்த மக்களை கொஞ்சமும் கூச்சமின்றி இருவரும் ஏமாற்றியுள்ளனர். இதனைத் தட்டிக்கேட்க நாதியற்றவர்களாகவே அங்கத்துவக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியின் சார்பாக தெரிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருந்துள்ளனர்.

இறுதி யுத்தத்தில் அகப்பட்ட மக்களின் வலிகளை கேட்டறிந்த பிறகும் இவர்களுக்கு உணர்வு வரவில்லை என்பதுடன் அழுகுரல்களையும், அவர்களின் அவலங்களையும் தனது பிழைப்புக்கான வழியாக ஆக்கிக்கொண்டுவிட்ட இழிசெயலை எப்படி வார்த்தைகளில் வடிப்பது என்று தெரியவில்லை.

சிரேஷ்ட கனிஷ்ட சட்டத்தரணிகளின் பொறுப்பற்ற செயலே தமிழ் மக்களின் இராஜதந்திர யுத்தத்தை நலிவடையச் செய்துள்ளது. இவர்களுக்கு தந்தை செல்வாமீது என்ன கோபமோ தெரியவில்லை. அவர் உருவாக்கிய கட்சியின் பெயரை வைத்துக்கொண்டு அவரிடமிருந்த நேர்மையை தூக்கியெறிந்து தனது சுயநலனுக்காகச் செயற்பட்டு அவருக்கும் அவர் உருவாக்கிய கட்சிக்கும் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே ஆட்சி மாற்றம் என்ற பெயரில் நடைபெற்ற அரசியல் கூத்தையும் அதன் பின்னரான ஐ.நா.வின் நகர்வுகளையும் அதில் கூட்டமைப்பின் வகிபாகத்தையும் நோக்க வேண்டியுள்ளது.

மகிந்த ராஜபக்ச தங்களது விருப்பங்களை நிறைவேற்றமாட்டார் என்பதைப் புரிந்துகொண்ட அமெரிக்க ஆதரவு நாடுகள் அவரை ஆட்சியிலிருந்து விரட்டி தமக்கு சார்பான அரசியல்வாதிகளை ஆட்சிப்பீடம் ஏற்றுவதில் தீவிர கவனம் செலுத்தின.



இதன் விளைவாக 2015ஆம் ஆண்டு சனவரி மாதம் 8ஆம் திகதி யாரும் எதிர்பாராத வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்காதபோதிலும் அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தும் சக்தியாக உருமாறியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிவர இருந்த ஆணையாளரின் அறிக்கையை பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சமர்ப்பிக்குமாறு ரணிலின் இடைக்கால அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது. இதற்கு கூட்டமைப்பும் ஆதரவு தெரிவித்திருந்தது.

சனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தென்னிலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமையால் இரண்டு கட்சிகளும் இணைந்து நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் கூட்டு அரசாங்கத்தை அமைத்தன. மார்ச் மாதம் கையளிக்கப்பட்டிருக்க வேண்டிய அறிக்கை

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

# இலங்கையில் நடைபெற்றது போர்க்குற்றமோ மனித உரிமை மீறலோ இல்லை. அது திட்டமிடப்பட்ட இனப்படுகொலை

## ஐ.நா.வில் தமிழ் நாடு சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் உரை

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம் எல்லாப் புகழும் தரும்"

மனத்தின் நலம் உயிருக்கு ஆக்கமாக விளங்கும். இனத்தின் நலமோ எல்லாப் புகழையும் வழங்கும். என உரைத்த எங்கள் பேராசான் திருவள்ளுவர் பிறந்த தமிழ் இனத்தின் பிள்ளையாய் இம்மாமன்றத்தில் உரைப்பதை பேறு என்று கருதுகிறேன்.

எங்கள் தெய்வத்திருமகனார் பசும்பொன்தேவரின் அரசியல் பிள்ளையாய் இம்மன்றத்தில் தமிழர்க்கு நீதி கேட்டுநிற்கிறேன். 1952 இல் பண்டாரநாயக்காவின் தமிழர் பகைப்போக்கைக் கண்டித்து, பசும்பொன் தேவர் அவர்கள் பேசினார்.

"இலங்கையில் தமிழர்கள் சிங்களவருக்கு இணையாக வாழ விரும்புகிறார்கள். அவ்வாறு வாழ முடியாத போது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிரை தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறார்கள். சிங்களவர்களுக்குச் சிங்களம் எப்படியோ அப்படித்தான் தமிழர்களுக்கும் தமிழ் உள்ளது. சிங்களவர்களுக்குத் தமது மேம்பாட்டில் எவ்வளவு அக்கறையுண்டோ அவ்வளவு அக்கறை தமிழர்களுக்கும் தமது மேம்பாட்டில் உண்டு. தமிழர்கள் சிங்களவர்களுக்கு. அடிமைகளாக வாழத் தேவையில்லை. சிங்களச் சன்னதியில் தமிழன் தலைகுனிய மாட்டான் என்று உரக்க குரல்கொடுத்தார். இந்த தமிழினம் இனப்படுகொலைக்கு உள்ளானபோது கண்ணீர் குருதியாய் வடிந்தது.

கடந்த 2009ஆம் ஆண்டில் உலகமே நினைத்து பார்க்காத வகையில் தமிழீழத்தில் தமிழ் இனப்படுகொலை நடந்தேறியது. இனப்படு கொலையை தடுத்து நிறுத்த வேண்டிய சர்வதேச சமூகம், தங்களது கடமையில் இருந்து தவறியுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

நான் வாழும் தமிழகத்தில் தமிழீழ நீதிக்காக தொடர்ந்து உணர்வுமிக்க போராட்டங்களை நடத்துகிறோம். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் தொடர்ந்து போராடுகிறார்கள். எங்களது உணர்வுகளுக்கு சர்வதேச சமூகம் செவிசாய்க்க வேண்டும்.

மதிப்பிற்குரிய மறைந்த முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இலங்கை அரசுக்கு எதிராக 24.10.2013 - 12.11.2013 ஆகிய திகதிகளில் அவசர சட்டசபை கூட்டி காமன்வெல்த் மாநாட்டை புறக்கணிக்க வேண்டுமென்றும், இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை விதிக்க வேண்டுமென்றும் இந்திய அரசிற்கு தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. தொடர்ந்து நாங்கள் சட்டப் பேரவைக்குள்ளும், வெளியிலும் போராடுகிறோம். ஆனால் இந்திய அரசு எங்கள் உணர்வை மதித்ததே இல்லை என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனப்படுகொலை நடந்தேறி 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இலங்கை சிங்கள அரசு நடத்தியது இனப்படுகொலைதான் என்பதற்கு பல வகைகளில், அடுக்கடுக்கான ஆதாரங்கள், நேரடி விசாரணைகள் - சாட்சிகள் என அனைத்தும் அடுக்கி வைத்த பிறகும் நீதிக்கான விசாரணக்கு காலம் கடத்தும் காரணமென்ன?




கடந்த காலங்களில் ஐ.நா.வின் மூவர் குழு அறிக்கை சாட்சியங்களோடு தமிமீழ இனப்படுகொலையை நிரூபித்தது. ஆனால் எங்கள் குருதி காய்வதற்குள் ஐ.நா.மனித உரிமைக் கவுன்சில், இராஜபக்ச அரசுக்கு பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றி தமிழர்களின் நெஞ்சில் ஈட்டியை பாய்ச்சியது.

2015 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் திகதி நடைபெற்ற மனித உரிமைக் கவுன்சிலின் 30 ஆவது அமர்வில், ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் மனித உரிமைகள் குறித்தும், போர்க் குற்றங்கள் குறித்தும் பன்னாட்டு நீதிபதிகளும் பங்கேற்கும் விதத்தில் விசாரணை நடைபெற வேண்டும் என்றும், நல்லிணக்கத்தை வளர்க்க வேண்டும் என்றும் அந்த 30 ஆம் எண் தீர்மானம் கூறியது. ஆனால் இரண்டு நாள் கழித்து இலங்கையில் எந்த வெளிநாட்டு நீதிபதியையும் அனுமதிக்கமாட்டோம் என்று இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனா ஆணவத்தோடு அறிவித்தார். பன்னாட்டுச் சமூகம் இதற்கு பதிலுரைத்தது என்ன? தொடர்ந்து ஈழத்தில் அமைதி நிலவுகிறதா? காணாமல் போனோரை மீட்டுத்தர சொல்லி தமிழ்ப் பெண்கள் வீதியில் போராடுகின்றனர். இன்னும் இராணுவம் வெளியேறவில்லை.. மாறாக சிங்களக் குடியேற்றம் நடக்கிறது.

12 மாதத்தில் மனித உரிமை ஆணையர் இலங்கை குறித்து சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையை மேலும் 6 மாதம் தள்ளிப் போட்டது. 18 மாதங்களுக்குப் பின்னர் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைக் கவுன்சிலின் 34ஆவது அமர்வில் 2017 மார்ச் 23 ஆம் தேதி ஈழத் தமிழருக்கான நீதியை ஆழக் குழிதோண்டிப் புதைத்து இனக்கொலை செய்த சிங்கள அரசுக்கு ஆதரவாக தீர்மானம் எண் 34 நிறைவேற்றப்பட்டுள்ளது. 36 நாடுகள் அத்தீர்மானத்துக்கு உடன்பட்டு முன்மொழிந்ததால், தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடாமலே நிறைவேற்றப்பட்டது. கொலை செய்தவர்களையே நீதிபதியாக்கி நீதியை அழித்த இழிவான செயல் நடந்தேறியதை மறக்க இயலாது.

ஐ.நா-வின் உள்ளக விசாரணை நீர்த்துப் போகச் செய்வதற்கான வேலைகளை பெரும் வலைப்பின்னல் அமைத்து தொடர்ந்து தடுத்து வருகிறது இலங்கை அரசு.

தமிழீழத்தில் இலட்சக்கணக்கான தமிழீழ மக்களை இனப்படுகொலை செய்து கொன்றொழித்த சிங்கள அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முற்படாமல், அவ்வரசுக்கு மீண்டுமொருமுறை வாய்ப்பு வழங்க ஐ.நா. மனித உரிமையில் மன்றம் நினைப்பது ஏன்?

கடந்த 2015ஆம் ஆண்டு வட அமெரிக்காவின் முன்முயற்சியால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்படி, சிங்கள அரசு தன்னைத் தானே விசாரித்துக் கொள்ளும் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமெனக் கோரியது. 2017ஆம் ஆண்டு வரை அது அமைக்கப்படவில்லை! எனவே, இரண்டாண்டு கால அவகாசம் வழங்கப்பட்டது. இப்போதும் அது அமைக்கப்படவில்லை. இப்போது, மீண்டும் இரண்டாண்டுகள் இலங்கைக்கு கால அவகாசம் ஏன் வழங்க வேண்டும். இந்திய அரசின் துணையோடு நடைபெற்று வரும் இந்தக் கால நீட்டிப்புகள், தமிழீழத்தில் நடைபெற்று வரும் கட்டமைப்பு இன அழிப்புக்கு துணை செய்யும் நடவடிக்கையாகும்.

ஐ.நா.தீர்மானத்தில் கூறப்பட்ட ஏனைய விடயங்களில் பெயரளவுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பெரும் முன்னேற்றங்களாக காண்பிப்பதும் ஐ.நா. மனித உரிமை மன்றம் வழங்கிய உறுதிப்பாட்டை நிறை வேற்றாமல் காலத்தை இழுத்தடிப்பதும் இலங்கை அரசின் நேர்மையற்ற பண்பையும் கபடத்தனத்தையும் வெளிப்படுத்துகிறது.

அதனடிப்படையில்தான் இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைத்தல் அல்லது சர்வதேச சிறப்பு குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவுதலே பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான வழிமுறையாகும் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

1. இலங்கைக்கு மீண்டும் கால நீட்டிப்பு வழங்கப்படக்கூடாது.

2. இலங்கை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு, அல்லது போர்க்குற்றப் புலன் விசாரணைக்கென்று இலங்கைக்காக அமைக்கப்படும் சிறப்புப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. போரினால் பாதிக்கப்பட்டோரின் துயரம் குறித்தும், ஏனைய சர்வதேச மனிதஉரிமை, மனிதநேயச் சிக்கல்கள் குறித்தும் கண்காணித்து ஆறு மாதத்துக்கொரு முறை அறிக்கையளிக்கும் பொறுப்பில் இலங்கைக்காக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் அமர்த்தப்பட வேண்டும்.

4. இன அழிப்புச் சான்றுகளை அழியவிடாமல் காக்க ஒரு நடுநிலையான பன்னாட்டுப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும்.

இதுவே எங்களது பிரதான கோரிக்கையாகும்.

இலங்கையில் நடைபெற்றது வெறும்போர்குற்றமோ மனித உரிமை மீறலோ மட்டுமல்லாது அது திட்டமிடப்பட்ட இனப்படுகொலை என்பதை ஐ.நா. பொதுசபை அறிவிக்க வேண்டும். சர்வதேச விசாரணையும் பொதுவாக்கெடுப்புமே தமிழ் மக்களுக்கான ஒரே தீர்வு. பன்னாட்டு விசாரணையும் பொதுவாக்கெடுப்பும் நடத்துவதற்கான தீர்மானத்தை கொண்டு வரவேண்டும். அதை காலம் கடத்தாது நிறைவேற்ற வேண்டும்.

நீதிக்கான மனித நேயக்குரலை இந்த ஐ.நா. அறமன்றம் ஓங்கி உயர்த்தி இவ்வுலகுக்கு உரைக்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.

வணக்கம்.

2ஆம் பக்க தொடர்ச்சி

## அனைத்துலக விசாரணையை நிராகரித்து இறைமையை பாதுகாத்துள்ளோம் - ரணில் விக்ரமசிங்க பெருமிதம்



எடுத்துள்ளது. படையினரை அனைத்துலக நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்குப் பதிலாக, ஐ.நா அமைதிப்படைக்கு தற்போதைய அரசாங்கம் அனுப்பிக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் ஒரு முழு பிரிகேட் படையினரை மாலிக்கு அனுப்புவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரையும், இராணுவத் தளபதியையும் கேட்டுக் கொள்கிறேன். இப்போது நாட்டின் போர் வீரர்களால், எந்த தடையும் இன்றி வெளிநாடுகளுக்கு செல்ல முடிகிறது. ஐ.நாவில் கூட பணியாற்ற முடிகிறது." என்றும் அவர் தெரிவித்தார்.

2ஆம் பக்க தொடர்ச்சி

## நீதியைத் தடுப்பதற்கே கால அவகாசம்! யாருக்காக செயற்படுகிறார் சுமந்திரன்? கேள்வி எழுப்புகிறது தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம்

நம்பிக்கையை வெளிப்படுத்த பிரேரணையை ஏற்றுக்கொள்வதற்கு மேலாக அதற்கு இணை அனுசரணையையும் இலங்கை வழங்குகின்றது. இதன்மூலம் போர்க்காலத்தில் ஏற்பட்ட கறையைப் போக்குவதற்கு இலங்கை முற்படுகின்றது. அதேகணத்தில் பிரேரணையை நடைமுறைப்படுத்தப்போவதில்லை என்பதை நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்கின்றது. இதன் மூலம், சிங்களக் கடும்போக்காளர்களைத் திருப்திப்படுத்திக் கொள்கின்றது.

தற்போதும் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை என்ற தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியது. உடனடியாகவே சர்வதேச நீதிபதிகளுக்கு இடமளிக்கப்போவதில்லை என்பதை இலங்கை அமைச்சர்கள் வெளிப்படையாகவே சொல்கின்றார்கள். இது மனித உரிமைகள் பேரவையை மோசமாக அவமதிக்கும் ஒரு செயற்பாடு என்றே தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கருதுகின்றது. மனித உரிமைகள் பேரவையின் பலவீனம்தான் இலங்கை அரசின் இந்தத் துணிச்சலுக்குக் காரணம். நாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கோ, நிர்ப்பந்திப்பதற்கோ தேவையான அதிகாரங்களைக் கொண்ட ஒன்றல்ல மனித உரிமைகள் பேரவை. பிரச்சினையை அதற்குள் முடக்கிவைத்திருப்பதன் மூலம் காலப்போக்கில் அதன் தீவிரத்தன்மையைக் குறைத்துவிட முடியும். அந்த உத்தியுடன்தான் இலங்கை அரசாங்கமும் செயற்படுகின்றது. பிரச்சினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ, அல்லது சிறப்புத் தீர்பாயம் ஒன்றுக்கோ சென்றால் மட்டுமே போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க முடியும்.

அவ்வாறு மற்றொரு தளத்துக்குப் பிரச்சினை கொண்டு செல்லப்படுவதைத் தடுப்பதற்கான ஒரு உத்தியாகத்தான் ஜெனீவாவில் தொடர்ந்தும் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. "இது கால அவகாசம் அல்ல. சர்வதேசத்தின் கண்காணிப்பைத் தொடர்வதற்கான தீர்மானமே இது" என தமிழ் மக்கள் மத்தியில் இதனை நியாயப்படுத்துவதற்காக சுமந்திரன் முயற்சிக்கின்றார். பிரச்சினையை மற்றொரு தளத்துக்குக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காகவா சுமந்திரன் இவ்வாறு கால அவகாசத்துக்காகக் குரல் கொடுத்தார் என்ற கேள்வி எழுகின்றது.

வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய சுமந்திரன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்து பேசியிருக்கின்றார். தமிழ் மக்கள் மத்தியில் தான் அம்பலமாவதைத் தவிர்ப்பதற்காகவும், வரப்போகும் தேர்தல்களை இலக்காகக் கொண்டும் அவர் அந்த உரையை நிகழ்த்தியிருக்கலாம். தன்னுடைய முன்னைய நிலைப்பாட்டுடன் அவர் முரண்படுவதை அது காட்டியது.

ஜெனீவாவில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பது இப்போது மீண்டும் உறுதியாகியிருக்கின்றது. இந்த நிலையில், பிரச்சினையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வேண்டியது தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்குள்ள வரலாற்றுக் கடமை. உள்ளக முரண்பாடுகளைத் தவிர்த்து இணைந்த செயற்பாட்டின் மூலம் அதற்கான வியூகங்களை தாயகத்திலிருந்தும், புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் செயற்படும் அமைப்புக்கள் வகுத்துக்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் வலியுறுத்துகின்றது.

8ஆம் பக்க தொடர்ச்சி

## கால அவகாசத்திற்கு ஆதரவாக கையொப்பம் போட்டவர்கள் முள்ளிவாய்க்கால் வருவது நீதியாகுமா?

ஒக்டோபருக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின்மீது தனது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார். இதனை ஒட்டியே தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சுமந்திரன் அவசர அவசரமாக ஜெனீவாவிற்கும் நியூயார்க்கிற்கும் பறந்து அந்த வரைபுத் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்திருந்தார். இதுவே பின்னர் 30:1 தீர்மானமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தினால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு இலங்கை அரசாங்கம் முதன் முதலாக இணை அனுசரணை வழங்கியது. புதிய அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ளதால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு வருட கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. இதில் தமிழ் மக்கள் நலன்சார்ந்து செயற்பட்டிருக்க வேண்டிய கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு முண்டுகொடுத்து அதனை காப்பாற்றும் போக்கைக் கையாண்டது.

இத்தீர்மானத்தை ஆதரித்து பேசிய சுமந்திரன் இலங்கை அரசாங்கம் இதனை 99வீதம் நிறைவேற்றாது என்பது எமக்கும் தெரியும். ஆனால் தீர்மானம் நிறைவேற்றினால் போதுமா? அதனை நடைமுறைப்படுத்த வேண்டாமா? எனவே இரண்டு வருட கால அவகாசம் கொடுத்து இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு கொடுத்துள்ள வாக்குறுதியை எந்த அளவிற்கு நிறைவேற்றுகிறது என்று பார்ப்போம் என்று தனது தரகர் தொனியில் பேசினார். இந்த இரண்டு ஆண்டுகளில் தமது வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றாது போனால் அது கடுமையான நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அரசாங்கத்தை எச்சரிப்பதைப் போன்று கருத்துரைத்தார்.

தீர்மானம் நிறைவேறி, கூட்டத்தொடர் முடிவடைந்த உடனேயே வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக அரசாங்கம் ஏற்றுக்கொண்ட எல்லா விடயங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை. இராணுவ வெற்றிவீரர்களை எக்காரணம் கொண்டும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தமாட்டோம். வடக்கு-கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்வோம். அரசியல் தீர்வு காண்பதற்காக புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு முயற்சிப்போம். கால அவகாசம் இருக்கிறது எம்மால் முடிந்ததை செய்வோம் என்று தெரிவித்தது. இவ்வாறே இரண்டு வருட காலத்தையும் அரசாங்கம் கடத்தியது. அரசாங்கத்தின் மீது நம்பிக்கையற்றிருந்ததாகக் கூறிய கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவில்லை மாறாக, மக்கள் முன்னெடுத்த போராட்டங்களையும் கைவிடுமாறு கோரியது.

2017 இல் மீண்டும் கால அவகாசத்தை வழங்குவதற்கு ஈபிஆர்எல்எவ் மறுத்த நிலையில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்களின் கையொப்பத்தை பெற்று கூட்டமைப்பு தனது ஆதரவினைத் தெரிவித்திருந்தது. இதுவே பின்னர் 34:1 தீர்மானமாக இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் வாக்கெடுப்பின்றி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேறியது. இதற்கான கால அவகாசம் இந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிலையில் அடுத்த கட்டமாக என்ன நடக்கப்போகிறது என்ற ஆவல் அனைவர் மத்தியிலும் எழுந்திருந்தது. ஆனால் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதே தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டாண்டு கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் கூறியதைப் போலவே திருவாளர் சுமந்திரன் சர்வதேசத்தின் கண்காணிப்பிற்கு உட்படுவதாக இலங்கை அரசாங்கம் மூன்றாவது முறையாகவும் ஏற்றுக்கொண்டுள்ளது என்று வெற்றி முழக்கமிட்டுள்ளார். இதுவரை எதையும் செய்யாத அரசாங்கம் இனியும் செய்யும் என்று எந்த அடிப்படையில் நம்புகிறார் அவர்? மேலும் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தேர்தல் ஆண்டுகள். இந்த கால அவகாசம் சிலவேளைகளில் பொதுத்தேர்தல் மற்றும் சனாதிபதித் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்கு சேகரிப்பதற்கு உதவலாம். அல்லது மகிந்த தரப்பு இதனையே பிரச்சாரமாக மேற்கொண்டு சிங்கள பௌத்த மேலாதிக்க மனப்பான்மையுடையவர்களின் வாக்குகளைப் பெறுவதற்கும் உதவலாம். ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்திற்கு இவற்றால் என்ன பயன்?

எனவே, கையில் கிடைத்த அரிய, பெறுமதி மிக்க துருப்புச் சீட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தத் தெரியாமல் தனது சுயநலன்களுக்காக ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்தையும் நடுத்தெருவில் விட்டுள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் குறிப்பாக இலங்கை தமிழரசுக் கட்சியுமே ஏற்க வேண்டும்.

# அப்பா என்ற வார்த்தைக்காக காத்திருந்தபோது மாமா என்ற வார்த்தையே இடியாக இதயத்தில் இறங்கியது.

மு.தமிழ்ச்செல்வன்

எல்லா அப்பாக்கள் போன்று நானும் எனது மகன் என்னை அப்பா என்றழைக்கும் அந்த தருணத்திற்காக காத்திருந்தேன். ஓமந்தை தடுப்பு முகாமில் நான் எதிர்பார்த்து காத்திருந்த அத்தருணம் வந்தது. தாயுடன் என் மகனை ஆறு மாதங்களுக்கு பின் சந்தித்திருக்கிறேன். இப்போது அவன் மழலை மொழியில் பேசுகிறான். அந்த மழலை மொழியில் அப்பா என்று கூப்பிடுவான் என்ற ஆவலோடு அருகில் சென்றேன். மாமா என்றான். என் நெஞ்சுக்குள் தற்கொலை தாக்குதல் நடந்து போன்றிருந்தது. அந்த வார்த்தை இடியாக இதயத்திற்குள் இறங்கியது. திகைத்து போய் நின்றேன். மனைவி விறைத்து போய் நின்றாள். அவளது முகத்தில் கண்ணீர் வடிந்தோடியது என்றார் குழந்தைவேல் விஜயகுமார்.

கிளிநொச்சி உதயநகரைச் சேர்ந்த ஒரு முன்னாள் போராளியான குழந்தைவேல் விஜயகுமார் 2009 நவம்பர் மாதம் ஓமந்தை தடுப்பு முகாமில் இடம்பெற்ற அந்த பத்து நிமிட சந்திப்பை பற்றி குறிப்பிடும் போதே இவ்வாறு தெரிவித்தார். தனது வாழ்நாளில் மறக்க முடியாத அந்த சந்திப்பு இன்றும் பசுமரத்து ஆணி போல் மனதில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டு திருமணம் செய்த விஜயகுமாருக்கு 2008.05.18 ஆம் திகதி மகன் தர்சன் பிறந்திருக்கிறார். அப்பா என்ற அந்தஸ்த்து கிடைக்கிறது. இயக்கப் பணி, காரணமாக வீட்டுக்கு வந்து செல்வது அவ்வவ்போதுதான். அப்பா என்ற வாழ்க்கையின் ஒரு படியை கடந்த அவருக்கு மகன் அப்பா என்றழைக்கும் தருணத்திற்காகவும் காத்திருந்திருக்கின்றார்.

மகன் பிறந்த காலப்பகுதி இறுதி யுத்தம் தீவிரமடைந்துக்கொண்டிருந்த காலம். கிளிநொச்சி இடப்பெயர்வு, அதன் பின்னர் தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால்வரை இடம்பெயர்ந்த வாழ்க்கை. இதனால்த்தான் மகனோடு செலவழித்த காலங்கள் மிகவும் குறைவு. இதனால் தனது முகம் மகனுக்கு நெருக்கமில்லாது போய்விட்டது. மகனின் முதலாவது பிறந்த நாளான 2009.05.18 அன்று வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினரால் பேருந்து ஏற்றப்படுகின்றோம். 18 ஆம் திகதி பேருந்தில் ஏறிய நாம் 20 ஆம் திகதி ஓமந்தையை வந்தடைந்தோம். அந்த இரண்டு நாட்கள்தான் எனது மகனோடு நானிருந்த அதிக நேரம். அதற்கு முன் ஒரு நாளும் அவ்வாறு இருந்ததில்லை. ஆனால் அந்த இரண்டு நாட்களும் மகிழ்ச்சியாய் இருந்ததில்லை.

ஓமந்தையில் நான் இராணுவத்திடம் சரணடைந்தேன். மனைவி மகனுடன் தனியாக எவரது உதவியுமின்றி செட்டிக்குளம் முகாமுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர். பின்னர்தான் தெரியும் அவர் மெனிக்பாம் ஆனந்தகுமாரசாமி முகாமில் கொண்டு சென்று விடப்பட்டார் என்று. இதன் பின்னர் ஆறு மாதங்களாக எங்களுக்குள் எந்த தொடர்புமில்லை. மனைவிக்கு தெரியாது நான் எங்கிருக்கிறேன் என்று. எனக்கு தெரியாது மனைவி எங்கு எப்படி இருக்கின்றார் என்று. பின்னர் முகாமிலிருந்து திருகோணமலையில் உள்ள உறவினர்களிடம் மனைவியும் மகனும் சென்றுவிட்டனர். ஆறு மாதங்களின் பின்னர் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலமே மனைவி நான் ஓமந்தையில் இருப்பதை அறிந்துகொண்டார். அங்கிருந்தே 2009 நவம்பர் மாதம் ஓமந்தை தடுப்பு முகாமுக்கு என்னை சந்திப்பதற்கு வந்திருந்தனர். அந்த 10 நிமிட சந்திப்பே என் வாழ்க்கையில் மறக்க முடியாத சந்திப்பு.

எனது மகனின் வாயால் அவனது மழலை மொழியில் அப்பா என அழைப்பான் என ஆவலோடு இருந்த போது மாமா என்றான். அத்தருணம் என் உணர்வுகள் ஒரு அப்பாவாக மரணித்தன. மகனின் மூன்று வயது வரை அவனருகில் நான் இருந்து பழகி விளையாடியது கிடையாது. அவன் பிறந்து ஒரு வயது வரை இயக்கப் பணிகள் நிமித்தம் நேரம் கிடைப்பதில்லை. பின்னர் மூன்று வயது வரை தடுப்பு வாழ்க்கை. இந்தக் காலப்பகுதியில் மனைவின் சகோதரர்களுடன் நெருக்கமாக பழகியவன். அதனால் அவன் பார்க்கின்ற ஆண்கள் அனைவரும் மாமாவாக இருந்தனர். அப்பா என்ற உறவு அவனுக்கு தெரியாது. மூன்று வயதில் கூட புகைப்படத்தை காட்டி இதுதான் அப்பா என்று சொல்வதற்கு கூட மனைவியிடம் எனது புகைப்படமும் இல்லை. யுத்தம் எல்லாவற்றையும் பறித்து விட்டது. ஒரு தடவை நெளுக்குளம் தடுப்பு முகாமுக்கு மனைவியும் மகனும் சந்திப்பதற்கு வந்திருந்தனர். அப்போது மகனை நோக்கி தம்பி இங்க வாங்கோ என்றேன். அவன் தாயிடம் அம்மா மாமா கூப்பிடுறார் என்றான். அருகில் இருந்த முன்னாள் சக போராளிகள் என்னை ஒரு மாதிரி என்னடா இது? என்ற வகையில் நோக்கினார்கள். பின்னர் அவர்களுக்கு நிலைமையை விளங்கப்படுத்தினேன்.



2009 தொடக்கம் 2011 வரை ஓமந்தை, வெலிகந்த, நெளுக்குளம், பூந்தோட்டம் என நான்கு தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு பெற்று குடும்பத்துடன் இணைந்தேன்.

மீள்குடியேற்றப்பட்டு கிளிநொச்சி உதயநகருக்கு வந்தோம். அப்போதும் என்னை மாமா என்றே அழைப்பான். எனக்கும் மாமா என்ற வார்த்தை அப்பா என்பதாகவே கேட்கும். பழகிவிட்டது. ஆரம்பத்தில் மாமா என்று சொல் செவிகளுக்குள் செல்லும் போது காதுக்குள் ஆணி வைத்து அறைவது போலிருக்கும்.

வீட்டில் என்னுடன் தனிமையில் இருக்கமாட்டான். நெருக்கமாக பழகமாட்டான். ஒரு அப்பாக மகனுடன் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேனோ அது என் வாழ்க்கையில் இடம்பெறவில்லை. ஆயிரம் ஆயிரம் கனவுகளுடன் இருந்தேன். ஆனால் எல்லாம் பகல் கனவாகிவிட்டது.

என்னிடம் அதை வாங்கி தா இதை வாங்கித்தா என்று கேட்க வேண்டிய வயதில். அப்படி ஒரு நாளும் கேட்டது கிடையாது. அவற்றையெல்லாம் தனது மாமாக்களிடம் கேட்பான். அவன் வளர்ந்த சூழலின் விளைவாக இருந்தது. வீட்டில் நானும் மனைவியும் மகனும் வசிக்க தொடங்கிய பின்னரே என்னுடன் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்க ஆரம்பித்தான். அப்பா என்று அழைப்பதற்கு அவனுக்கு நான்கு வருடங்கள் சென்றது. இப்போது எனக்கு இரண்டு பிள்ளைகள் ஒரு மகன் ஒரு மகள். மகன் இப்போது என்னுடன் மிகவும் நெருக்கமாக உள்ளான். எனக்கு ஏற்பட்ட இந்த நிலமை எந்த அப்பாக்களுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது. அந்த வலி மிகவு; கொடியது என்றார்.

2ஆம் பக்க தொடர்ச்சி →

## கால அவகாசம் அல்ல, ஒரு கால நீட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விளக்கம் குறித்து தமிழ் புத்திஜீவிகள் கேள்வி

கூறும் நீங்கள், கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்திற்கு எத்தகைய அழுத்தங்களைப் பிரயோகித்தீர்கள்? இப்படிச் சொல்லிக்கொண்டே மறுபுறத்தில் கால அவகாசம் வழங்கக்கூடாது என்று முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கும் ஆதரவு வழங்குவது ஏன்?

காணாமல்போனோர் அலுவலகத்திற்கான சட்டமூலத்தின் மீது நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் அந்த அலுவலகத்திற்கு எதிராக கடுமையான விமர்சனத்தை வைத்து உரையாற்றிய நீங்கள் மாலையில் நடந்த வாக்கெடுப்பில் அதனை ஆதரித்து வாக்களித்ததன் மர்மம் என்ன? வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் மீதான குழுநிலை விவாத்தில் 16.03.2019 அன்று நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதனும் சிறிநேசனும் சஜித் பிரேமதாசவை வாயாரப் புகழ்ந்திருக்கையில் அவர் ஐக்கிய இலங்கையில் ஒற்றையாட்சியே நீடிக்கும் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி என்ற பயணத்தை ஆரம்பிக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும். மூதூரில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள விகாரையை அமைத்தே தீருவோம் என்றும் சஜித் சொல்லியுள்ளாரே. அப்படியானால் நீங்கள் முண்டுகொடுப்பதால் யாருக்கு என்ன பயன்? ஒருபுறம் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்கிறீர்கள். மறுபுறம் கால அவகாசத்திற்கு எதிரான போராட்டங்களில் பங்கெடுக்கிறீர்கள். காணாமல் போனோர் அலுவலகத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறீர்கள். மறுபுறம் அந்த அலுவலகத்திற்கு எதிராகக் குரல் கொடுப்போருடன் இணைந்து குரல் கொடுக்கிறீர்கள். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும் என்கிறீர்கள். அரசாங்கம் கொடுக்க முன்வந்துள்ள ஆறாயிரம் ரூபாவை எதிர்க்க முன்வர மறுக்கிறீர்கள். இணைந்த வடக்கு-கிழக்கில் சமஷ்டி வேண்டும் என்கிறீர்கள் வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிக்கும், சமஷ்டியை மறுதலிக்கும் அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கின்றீர்கள். உங்களது உண்மையான முகம்தான் என்ன? இந்த கேள்விக்கு நீங்கள் கொள்கைசார்ந்து பதில் சொல்வீர்களா?

# ஐ.நாவில் இலங்கைக்கு காலஅவகாசம் நீதிக்கானபயணத்தில் தமிழர்களுக்கு பின்னடைவு

## ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி அறிக்கை

ஐ.நாவின் கால அவகாசம் நீதிக்கான பயணத்தில் தமிழர்களுக்கு பின்னடைவு என்று ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ. மணி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்

ஐ.நா. மனித உரிமை அமைப்பின் கூட்டத் தொடரில் பிரித்தானியாவால் முன்மொழியப்பட்டு அதில் இலங்கையும் கூட்டாக இணைந்து கொண்ட தீர்மானம் கடந்த மார்ச் 21 வியாழன் அன்று இந்தியா உள்ளிட்ட 32 நாடுகளின் முன்னிலையில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின் சாறமாகப் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்புப் பொறிமுறையின் மூலம் இறுதிப் போரில் நடந்த சர்வதேச சட்டவிதி மீறல்களைப் புலனாய்வு செய்வதற்கு இரண்டாண்டு காலநீட்டிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது மார்ச் 2021 இல் மீண்டும் இதன் முன்னேற்றங்கள்மீது அங்கு விவாதம் நடத்தப்படும்.

கட்டமைப்புரீதியான தமிழின அழிப்பை நிறைவேற்றுவதற்கான கால அவகாசமாக இது அமையப்போகிறதே அன்றி கலப்புப் பொறிமுறையின்வழி பொறுப்புக்கூறலுக்கான கால அவகாசமாகவோ, கால வரையறையாகவோ இது இருக்கப்போவதில்லை.

ஐ.நா. மனித உரிமை அமைப்பில் மார்ச் 20 அன்று சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் திலக் மரப்பனா பேசுகையில், கலப்புப் பொறிமுறைக்கு வாய்ப்பில்லை என்பதைப் பின்வருமாறு உறுதிபட சொல்லிவிட்டார். "அத்தகைய செயல்வழியில் சிறிலங்காவின் குடிமக்கள் அல்லாதவர்கள் உட்படுத்தப்பட வேண்டும் என்பது சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடனும் வெகுமக்கள் வாக்கெடுப்புடனுமான அரசமைப்புச் சட்டத் திருத்தமின்றி வாய்ப்பில்லை என்று விளக்கப்பட்டுள்ளது"

ஆகவே, ஐ.நா. மனித உரிமை அமைப்புக் கூட்டத் தொடரிலேயே தீர்மானத்தின் சாறத்தை நிறைவேற்ற முடியாது. ஏனெனில் அதற்கு இலங்கையில் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை வேண்டும் என்று சொல்லியுள்ளார் அவர். கடந்த ஆண்டு சிங்களப் பேரினவாத ஆளும் வகுப்புகளுக்கிடையே நடந்த அதிகாரப் போட்டியின் முடிவில் இரணிலுக்கு இருந்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் குலைத்துவிட்டதே அம்முயற்சியின் பெறுபேறு என்று சனவரி 2019 இல் பெங்களூரில் தி இந்து நிர்வாக இயக்குனர் என்.ராமிடம் மகிந்த இராசபக்சே மார்தட்டிக் கொண்டதை இங்கு நினைவுப்படுத்துகிறோம்.

இந்தியாவைப் பொறுத்தவரை சிறிலங்காவுக்கு கீறலேதும் விழுந்தவிடாதபடி பார்த்துக் கொண்டது. இரண்டு ஆண்டு காலநீட்டிட்ப்புப் பெறத் துணை நின்றது பதின்மூன்றாவது சட்டத்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அங்கே பேசியது. மொத்தத்தில், தமிழக சட்டமன்றத் தீர்மானத்தின்படி பன்னாட்டுப் புலனாய்வையும் அரசியல் தீர்வுக்கானப் பொதுவாக்கெடுப்பையும் வலியுறுத்த வேண்டிய கடமையை இந்தியா இம்முறையும் செய்யத் தவறிவிட்டது.

புவிசார் அரசியல், வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டி, உலக ஒழுங்கு என்ற பெயரில் எல்லாம் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நாடகங்களாகவே உலக வரலாற்றை நகர்த்திக் கொண்டு செல்ல முடியும் என்று ஆதிக்க அரசுகள் விரும்பினாலும் இம்மாயத்திரைகளைக் கிழித்துக் கொண்டு வரலாறு பயணித்துக் கொண்டே இருக்கிறது. 2015 இல் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது நிலவிய இலங்கையின் அரசியல் சூழலில் இருந்து இந்நான்கு ஆண்டுப் பயணத்தில்



இரு முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஒன்று தேசிய அரசாங்கம், நல்லாட்சி, மீளிணக்கம் என்ற புளுகுகள் எல்லாம் கானல் நீராய் அம்பலப்பட்டு சிறிசேனா இராசபக்சே முகாமுக்கும் இரணில் முகாமுக்கும் இடையிலான அதிகாரப் போட்டி நிர்வாணமாக நடனமாடக் காண்கிறோம். இரண்டு சம்பந்தன், சுமந்திரன் போன்ற சந்தர்ப்பவாத தமிழ் அரசியல் தலைமைகளின் இரண்டகங்கள் வடக்குகிழக்கின் வீதிகளில் மக்களால் அம்பலப்படுத்தப்பட்டு வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தீர்ப்பளிக்கப்பட உள்ளது. இந்த மாற்றங்களை இதே திசையில் வளர்ச்சிப் பெறவைப்பதில், வல்லரசுகளின் கணக்குகள் பொய்த்துப் போகச் செய்வதில், பரமபதத்தில் பாம்பிடம் கொத்துப்பட்டு கீழிறங்குவது போல் சிங்கள முகாம் சறுக்குவதும் ஏணியில் ஏறி முன்னேறுவது போல் தமிழர் முகாம் முன்னேறுவதும் தங்கியிருப்பது வரலாற்று வழியில் கட்டமைக்கப்பட்டு இனவழிப்புக் கலாச்சாரமாக வளர்ந்துவிட்டுள்ள சிங்களப் பேரினவாதத்தின் பிடியில் சிக்குண்டுட்டிருக்கும் சிங்கள மக்களிடமும் நீதி மற்றும் விடுதலைக்கான போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்களிடமுமே. எனவே, உலக நாடாளுமன்றங்கள், ஐ.நா. மன்றங்களில் ஆட்ட நகர்வுகளை மாற்றியமைக்கப் போவது ஈழத்திலும், தமிழ்நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் தமிழ்மக்கள் பெருந்திரளாய் வீதிமன்றங்களில் வீறுகொண்டெழுவதே. வரலாறு நம் பக்கமே!

## தமிழக மீனவர்கள் 11 பேரை கைது செய்தது இலங்கைக் கடற்படை

கச்சத்தீவு அருகே தமிழக மீனவர்கள் படகில் சென்று மீன்பிடிப்பது வழக்கம்.

நேற்றிரவு ஏராளமான மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இலங்கை கடற்படையினர் இரண்டு படகுகளை பறிமுதல் செய்ததோடு, 11 மீனவர்களையும் கைது செய்து யாழ் காங்கேசன்துறை கடற்படை முகாமில் வைத்து விசாரணை நடத்துப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## நரேந்திர மோடிக்கு எதிராக 111 தமிழக விவசாயிகள் போட்டி

இந்திய மக்களவை தேர்தல் இன்னும் சில வாரங்களில் நடைபெற உள்ள நிலையில், பிரதமர் நரேந்திர மோடி போட்டியிடும் வாரணாசி தொகுதியில், அவருக்கு எதிராக 111 தமிழக விவசாயிகள் வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ளனர் என்று. தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாகண்ணு சர்வதேச ஊடகம் ஒன்றிற்க்கு வழங்கிய செய்தியிலே மேற்படி தகவலை தெரிவித்தார்.

"கடந்த தேர்தலில், விவசாய விளைபொருட்களுக்கு லாபகரமான விலை, நதிகள் இணைப்பு, விவசாயக் கடன்களுக்கு தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை பிரதமர் மோடி அளித்தார். ஆனால், எதையும் நடைமுறைப்படுத்தவில்லை. அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழின உணர்வாளர் முனைவர் ம.நடராஜன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு






தமிழின உணர்வாளரும் மனிதநேயருமான முனைவர் ம.நடராஜன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தஞ்சையில் உள்ள தமிழரசி மண்டபத்தில் நடைபெற்றது.

நடராஜனின் உறவினரும் அ.ம.மு.க.வின் துணை பொதுச் செயலாளருமான TTV தினகரன், பழ நெடுமாறன் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இயக்கங்களின் தலைவர்கள் தமிழ் ஆர்வலர்கள் என பெரும் திரளானவர்கள் கலந்து கொண்டு முனைவர் ம.நடராஜன் அவர்களின் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

# உலகில் நான்கில் ஒரு மரணம் சுற்றுச்சூழல் பாதிப்பால் ஏற்படுகிறது



உலகில் ஏற்படும் நான்கில் ஒரு மரணத்துக்கு மனிதன் உண்டாக்கிய சுற்றுச்சூழல் சீரழிவுகள்தான் காரணம் என்று ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

அன்றாடம் அளவின்றி வெளியிடப்படும் நச்சு வாயுக்கள், நீர்நிலைகளை மாசுபடுத்தும் வேதிப்பொருட்கள், வேகமாக அழிக்கப்பட்டு வரும் சுற்றுச்சூழல் அமைப்பு எல்லாம் சேர்ந்து, உலகெங்கும் கோடிக்கணக்கான மக்களைப் பாதித்து வருகின்றன, அதன் தாக்கம் உலகப் பொருளாதாரத்திலும் எதிரொலிக்கிறது என்று ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது.

உலகளாவிய சுற்றுச் சூழல் பார்வை என்ற அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டு காலமாக தயார் செய்யப்பட்டு வந்த இந்த ஆய்வறிக்கையை, 70 நாடுகளைச் சேர்ந்த 250 விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

வளர்ந்த நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையில் பிளவு வளர்ந்து வருகிறது. அதற்கு, வளர்ந்த நாடுகளின் அதிக நுகர்வு, சுற்றுச்சூழல் மாசுபாடு, உணவு வீணாக்கம் ஆகியவையும், அதனால் ஏழை நாடுகளில் ஏற்படும் வறுமை, உணவுப் பற்றாக்குறை, வியாதிகளும்தான் காரணம்.

அதிகரித்து வரும் வறட்சி, வெள்ளம், புயல் போன்றவற்றை உயரும் கடல் மட்டம் மேலும் மோசமாக்கி வருகிறது. பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றமும் அதிகரித்து வருகிறது. எதிர் காலத்தில் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வை பருவநிலை மாற்றம் அபாயத்தில் தள்ளும் என்ற அரசியல் உணர்வும் வளர்ந்து வருகிறது என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் சார்ந்த சுகாதார அவசரநிலை இப்போது ஏற்பட்டுள்ளது. மோசமான சுற்றுச்சூழல் காரணமாக, உலகளவில் சுமாராக 25 சதவீத வியாதிகளும், இறப்புகளும் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசுபாட்டின் காரணமாக மட்டும் கடந்த 2015-ம் ஆண்டில் 90 லட்சம் மரணங்கள் நேர்ந்திருக்கின்றன.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத காரணத்தால் ஆண்டுதோறும் 14 லட்சம் பேர் இறக்கின்றனர். வயிற்றுப்போக்கு, நுண்கிருமிகள் நிறைந்த நீரைப் பருகுவதால் ஏற்படும் பாதிப்பு என்ற இந்நிலை, தடுக்கப்படக்கூடியதுதான்.

கடலுக்குள் கொட்டப்படும் வேதிப்பொருட்களால் ஏற்படும் சீர்குலைவு, பல தலைமுறைகளுக்கு ஆரோக்கியப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. தீவிர விவசாயம், காடுகள் அழிப்பு ஆகியவற்றால், 300 கோடிப் பேரின் வாழ்விடங்களில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

காற்று மாசுபாட்டின் காரணமாக மட்டும் ஒவ்வோர் ஆண்டும் 60 முதல் 70 லட்சம் பேர் இறக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்து சிறுமிகள் வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்யப்பட்டு திருமணம் -இம்ரான் விசாரணைக்கு உத்தரவு



பாகிஸ்தானில் இந்துக்கள் சிறுபான்மையினராக உள்ளனர். சிந்து மாகாணத்தில் ஹோலி பண்டிகை கொண்டாடிய ரவீனா (வயது 13), ரீனா (வயது 15) என்ற இரு சிறுமிகளை பணக்காரக் கும்பல் கடத்தி சென்றுள்ளது. சிறுமிகளை மதமாற்றம் செய்து வலுக்கட்டாயமாக திருமணம் செய்துள்ளது. இரு சிறுமிகளுக்கும் மதக்குரு திருமணம் செய்து வைப்பது போன்ற வீடியோக்கள் வைரலாக பரவியது. குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பில் கோரிக்கைகள் வலுத்தது.

இதற்கிடையே சிறுமிகள் பேசுவது தொடர்பான வீடியோ ஒன்று வெளியாகியது. அதில் இரு சிறுமிகளும் தாங்கள், சம்மதத்துடன் மதம் மாறியதாக கூறும் காட்சிகள் இடம்பெற்று இருந்துள்ளது. இந்து சிறுமிகள் கடத்தப்பட்டது தொடர்பாக பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்திடம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அறிக்கையை கோரியுள்ளார்.

இந்நிலையில் சிறுமிகள் கடத்தப்பட்டது தொடர்பாக விசாரணைக்கு இம்ரான் கான் உத்தரவிட்டுள்ளதாக பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் பவாத் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

# நியூசிலாந்தில் தொழுகைக்காக மசூதிகள் மீண்டும் திறப்பு




அமைதி தவழ்ந்து வந்த நியூசிலாந்து நாட்டின் கிறைஸ்ட்சர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதியிலும், லின்உட் மஸ்ஜித் மசூதியிலும் பயங்கரவாதிகள் கடந்த 15ஆம் திகதி துப்பாக்கிச்சூடு நடத்தி 49 பேரை கொன்று குவித்தனர்.

இந்த தாக்குதலில் ஏராளமானோர் படுகாயமும் அடைந்தனர். தாக்குதலில் முக்கிய குற்றவாளியான ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த 28 வயதான பிரெண்டன் டாரண்ட் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அல்நூர் மசூதி பழுது பார்த்து, வர்ணம் பூசப்பட்ட நிலையில் இஸ்லாமிய மக்களின் தொழுகைக்காக நேற்று மீண்டும் திறக்கப்பட்டது. சுமார் 3 ஆயிரம் பேர் நகரில் அமைதிப்பேரணி நடத்தி, பயங்கரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மீதான தங்கள் அன்பை வெளிப்படுத்தினர்.

சிறு சிறு குழுக்களாக சென்று தொழுகை நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த 3 வயது சிறுவனின் தந்தையான ஏடன் திரியே என்பவர், அல்நூர் மசூதியில் தொழுகை நடத்தி விட்டு வெளியே வந்தார். அப்போது அவர், “நான் இப்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். மீண்டும் இயல்பு நிலைக்கு வந்து விட்டேன்” என கூறினார். மசூதியில் போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

லின்உட் மஸ்ஜித் மசூதியும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. அங்கும் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தினர்.

# சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகளை ஒழித்து விட்டோம் – டிரம்ப் பெருமிதம்

சிரியா நாட்டு மண்ணில் இருந்து ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தை துடைத்தெறிந்து விட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் மற்றும் சிரியா நாட்டின் சில பகுதிகளை கடந்த 2014ஆம் ஆண்டில் ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் அங்கிருந்தவாறு உலகம் முழுவதும் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்குட்பட்ட ஆட்சியை நிறுவப்போவதாக பிரகடனப்படுத்தி இருந்தனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் சுமார் 88 ஆயிரம் சதுர கிலோமீட்டர் அளவிலான நிலப்பரப்பை இவர்கள் கைப்பற்றி வைத்திருந்தனர். அரசுப்படைகள் தாக்குதல் நடத்த இங்கு வந்தபோது பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி போரிட்டனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்க




விமானப்படை மற்றும் தரைப்படையினரும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டனர். அவர்களின் பிடியில் சிக்கியிருந்த பல பகுதிகளை அரசுப்படைகள் கைப்பற்றின.

ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்க விமானப்படை மற்றும் தரைப்படையினரும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டனர். அவர்களின் பிடியில் சிக்கியிருந்த பல பகுதிகளை அரசுப்படைகள் கைப்பற்றின.

இதேபோல், சிரியாவிலும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பிடியில் சிக்கியிருந்த கடைசி பகுதியான பாகுஸ் நகரை கைப்பற்ற சில மாதங்களாக சிரியா ராணுவத்துடன் இணைந்து அமெரிக்க வீரர்கள் நடத்திய உச்சக்கட்ட போர் நேற்று முடிவுக்கு வந்தது. அங்கிருந்த பயங்கரவாதிகள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டனர். அந்நகரின்மீது நேற்று சிரியா நாட்டின் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

# 100 நாட்கள் சாப்பிடாமல் இருந்த நபர் – எப்படி சாத்தியமானது? நாசா வெளியிட்டுள்ள ஆய்வு முடிவுகள்!



தொடர்ச்சியாக, சரியான முறையில் ஈடுபடுபவர்களுக்கு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு பிறகு உணவுத் தேவை என்பது மிகக் குறைவாக இருப்பதாக ஆய்வு முடிவில் தெரிய வந்துள்ளது. தன்னை 'சூரியக்கதிர்களை உண்பவன்'என அழைத்துக் கொள்ளும் இந்தியாவைச் சேர்ந்த 'ஹிரா ரத்தன் மானக்' என்பவர் தன்னை ஆராய்ச்சி செய்யுமாறு நாசா விஞ்ஞானிகளை அணுகினார்.

ஹிரா ரத்தன் மானக்

அதிகாலையில் சூரியனின் கதிர்களை வெறும் கண்ணால் பார்த்து வணங்குவது இந்தியா இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பண்டைய வழிபாட்டு முறைகளில் ஒன்றாக இருக்கிறது. இந்தியாவில் யோகக் கலைகளில் ஒன்றாக பார்க்கப்படும் சூரியனைப் பார்க்கும் வழக்கமானது, பண்டைய மாயன் நாகரீகம், எகிப்து, திபெத் ஆகிய நாடுகளில் பல்வேறு பெயர்களில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சூரியனைப் பார்த்தால் டெலிபதி போன்ற 'Super Human Abilities' எனப்படும் சிறப்பு சக்திகள் கிடைக்கும் என்றும் உணவு உண்ணாமல் கூட வாழலாம் எனவும் நாஸா அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. பொதுவாக சூரியனை பார்த்தால் உடலில் உள்ள நோய் எதிர்ப்புத் திறன் அதிகரித்து, உடல் ஆரோக்கியமாக இருக்கும் என இந்தியாவில் நம்பப்பட்டு வருகிறது. எனவேதான் சூரியனை பார்த்து வணங்குவது, முக்கியமான வழிபாட்டு முறையாக இந்தியாவில் அறியப்படுகிறது. ஆனால் சூரியனை வெறும் கண்ணால் பார்ப்பதன் மூலம் நாம் எதிர்பார்க்காத சக்திகளை பெற முடியும் என ஆச்சரியப்படுத்தியுள்ளது நாசா.

சூரியனை பார்ப்பது என்பது சூரியனிலிருந்து வரும் புற ஊதாக்கதிர்களின் தாக்கம் குறைவாக இருக்கும் அதிகாலை நேரத்தில் சூரியனை பார்ப்பதாகும். இந்த செயல்முறையின் போது நாம் வெறும் காலுடன் இருத்தல் அவசியம். பூமிக்கும் சூரியனுக்குமான ஒரு இணைப்புப் பாலமாக நாம் செயற்பட வேண்டும். இதனை

நாசாவினால் நிதியுதவி பெறக் கூடிய பென்சில்வேனியா மருத்துவர்கள் குழு அவரை ஆராய்ச்சி செய்த போது, பல ஆச்சரியத்தக்க தகவல்கள் கிடைத்தன. சூரிய ஒளி மூலம் கிடைக்கும் சிறப்பு சக்தியால் அவர் உணவு உண்பதே இல்லை என மருத்துவர்கள் அறிந்தனர். 100 நாட்களுக்கு அவரை தங்கள் கண்காணிப்பில் வைத்திருந்த மருத்துவர்கள், ஹிரா ரத்தன் மானக்கினால் சூரிய ஒளியை ஆற்றலாக எடுத்துக் கொண்டு உயிர் வாழ முடிகிறது எனவும் இந்த காலகட்டத்தில் சிறிதளவு தண்ணீர் மற்றும் மோர் மட்டுமே அவர் எடுத்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

முதல் மூன்று மாத காலத்திற்கு சூரியனை பார்க்கும் போது சூரியனின் ஆற்றலானது கண்கள் வழியாக சென்று 'ஹைபோதாலமஸ் பாதை' என்கிற அங்கத்தில் தனது சக்தியை சேர்க்கிறது. கண்களில் உள்ள ரெட்டினாவுக்கும் மூளைக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் பாதையே 'ஹைபோதாலமஸ்' என அழைக்கப்படுகிறது. இதன் பின்னர் இந்த பாதை வழியாக சூரிய ஆற்றலானது மூளையை அடைகிறது. அதன் பின்னர் மன அழுத்தம், பசி ஆகியவை சிறிது, சிறிதாக குறையத் தொடங்குமாம். மேலும் மனிதனிடம் உள்ள எதிர்மறை எண்ணங்கள், கெட்ட பழக்க வழக்கங்கள் மறைந்து போகுமாம். சூரியனை பார்த்தல் செயல்முறையை செய்யத் தொடங்கிய 3 மாதங்களிலிருந்து 6 மாதத்திற்குள், உடல் உள்ள நோய்கள் மறைந்து போகுமாம். இதற்கு காரணம் சூரியனிலிருந்து வெளிப்படும் வண்ணங்கள், நம் உடலில் உள்ள பல்வேறு பாகங்களில் ஏற்பட்டுள்ள நோய்களை குணப்படுத்துவதுதான்.


வண்ண மருத்துவம் எனப்படும் துறையைச் சேர்ந்த மருத்துவர்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக கல்லீரல் நோய்களுக்கு பச்சை நிறமும், இதயத்திற்கு மஞ்சள், சிறுநீரகத்திற்கு சிவப்பு ஆகிய வண்ணங்கள் குணமளிக்கின்றனவாம். இப்படி வானவில்லில் இருக்கக் கூடிய அனைத்து வண்ணங்களும் சூரிய ஒளி வழியாக நம் உடலில் புகுந்து நோய்களை போக்குகிறதாம். வண்ண மருத்துவம் என்ற கோட்பாட்டின் கீழ்தான் பல வண்ணங்களில் இருக்கக் கூடிய சரிவிகித உணவை எடுத்துக் கொண்டால் நோய்கள் அண்டாது என கூறப்படுகிறதாம்.

சூரியனை பார்த்தல் செயல்பாட்டின் நிபுணர்கள், உடலுக்கு தேவை உணவு இல்லை எனவும் அதிலிருந்து கிடைக்கும் ஆற்றல்தான் உடலை இயக்க தேவை எனவும் கூறுகின்றனர். அந்த ஆற்றலானது சூரிய ஒளி மூலமே கிடைத்துவிடுவதால், உணவு தேவைப்படுவதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சூரியக் கதிர்களை நேரடியாக பார்ப்பது கண்களில் உள்ள ரெட்டினாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கண் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சரியான நேரத்தில், சரியான வழிமுறையில் சூரியனை பார்த்தால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் அவர்கள் கூறுகின்றனர். சூரியனை பார்ப்பதை பல ஆண்டுகளாக செய்து வருபவர்களின் கண்களை சோதித்த போது, அவர்களின் கண்களில் எந்த பாதிப்பும் இல்லை என்பதும் தெரிய வந்துள்ளது. இரு கை விரல்களையும் கோர்த்து, வளைத்து வைத்து, அந்த துவாரத்தின் வழியே சூரியனைப் பார்ப்பதை சில குழந்தைகள் செய்வதைப் பார்த்திருப்போம். ஆதாயம் அறியாமல் வேடிக்கை விளையாட்டாக விளையாடுகிறார்கள்.

சூரிய நமஸ்காரம் என்பதும் கண்களுக்காகவும், உடல் ஆரோக்கியத் திற்காகவும் அனுசரிக்கப்படுகிறது. அதிலும் முக்கியமாக மூட்டு, முதுகு வலி பிரச்னைகள் வருவதைத் தவிர்க்கலாம். சூரிய ஒளியின் பயன்கள் அநேகம் இருக்கின்றன. பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நம் சாமர்த்தியம்தான்.

## மூளை முடிவு எடுக்க 11 வினாடிகள்

நாம் மனதிற்குள் ஒரு முடிவு எடுப்பதற்கு முன்பே, நமது ஆழ்மனதில் அந்த முடிவு எடுக்கப்பட்டுவிடுகிறது. இதை உளவியலாளர்கள் காலங்காலமாக சொல்லி வந்துள்ளனர்.



ஆனால், அண்மையில் தான் எதை முன்பாக ஆழ்மனதில் முடிவு எடுக்கப்படுகிறது என்பதை, மூளையியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மூளையின் இயக்கத்தை படம்பிடிக்கும். எப்.எம். ஆர்.ஐ., இயந்திரத்தில் 14 பேரை படுக்க வைத்து இதற்கான ஆய்வு நடத்தப்பட்டது. பங்கேற்பாளர்களிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டு, அதற்கு விடையாக அவர்கள் ஒரு பொத்தானை அழுத்தும்படி சொல்லப்பட்டது.

அப்போது மூளையில் முடிவு எடுக்கும் பகுதியில் ஏற்பட்ட மாறுதல்களையும், பொத்தானை அழுத்தும்போது ஏற்பட்ட மாறுதல்களையும், விஞ்ஞானிகள் கவனித்தனர். இந்த இரு செயல்களுக்கும் உள்ள இடைவெளி, 11 வினாடிகள். எனவே ஒரு முடிவை நாம் உணர்வதற்கு 11 வினாடிகள் முன்பாகவே மூளையில் அந்த முடிவு எடுக்கப்பட்டு விடுகிறது என, விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் நடத்திய இந்த ஆய்வின் முடிவு, 'சயன்டிபிக் ரிப்போர்ட்ஸ்' இதழில் வெளியாகியுள்ளது.

## வெட்டினால் முளைக்கும் தலை



பல்லியின் வால் துண்டித்தால், மீண்டும் முளைக்கும். அதற்கு ஒரு படி மேலாக, சில வகை நாடா புழுக்களின் தலை துண்டானால், அதன் மூளை உட்பட, முழு தலையும் மீண்டும் முளைக்கிறது என்கிறது, 'புரசீடிங்ஸ் ஆப் தி ராயல் சொசைட்டி பி' இதழில் வெளியாகியுள்ள ஓர் ஆய்வு.

நான்கு நாடுகளிலிருந்து கொண்டுவந்த, 35 வகை நாடா புழுக்களை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்தனர். அவற்றில், எட்டு வகை நாடா புழுக்கள் மட்டும், தலை துண்டிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் முழு தலையை வளர்த்தெடுக்கும் திறனைப் பெற்றிருந்தன. இந்த மறுவளர்ச்சித் திறன், இப் புழுக்களுக்கு மிக சமீபத்தில் தான், அதாவது, 1-1.5 கோடி ஆண்டுகளுக்குள்ளாகத் தான் உருவாகியிருக்க வேண்டும் எனவும், ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.